# உதயன்

சுடர் 30 கதிர் 365 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 10, வியாழக்கிழமை 26.11.2015



இலங்கை லொத்தர் வரலாற்றில்
அதிகூடிய பரிசுத்தொகை
ரூபா.
பதினொரு கோடிக்கும்
அதிகமான சூப்பர் பரிசு
இன்றைய
கொவிசெத லொத்தரை
நம்பிக்கையுடன் வாங்குங்கள்
NATIONAL LOTTERIES BOARD


# நாளை மாவீரர் நாள்

## உறவுகளை அஞ்சலிப்பதை எவராலும் தடுக்க முடியாது

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, நவம்பர் 26
தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி உயிர்நீத்தவர்களை நினைவு கூரும் மாவீரர் நாள், நாளை 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த நிலையில், உயிர் நீத்த உறவுக ளைத் தமிழ் மக்கள் நினைவுகூர்ந்து அஞ்ச லிப்பதை எவராலும் தடுக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலை வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வருமான இரா.சம்பந்தன் நேற்று உதயனிடம் தெரிவித்தார்.

உயிர் நீத்த தமது உறவுகளுக்கு அமைதியான முறையில் ஆத்மசாந்திக் கிரியைகளை நிறைவேற்றி அஞ்சலி செலுத்துவதற்கு தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு. இதனை எவராவது தடுத்தால் அது பெரும் மனித உரிமை மீற லாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிர் நீத்தவர்கள் மதிக்கப்படவேண்டும். இதனைத் தடுக்க முயல்வது நாட்டின் நல்லிணக்கத்தைப் பாதிக்கச் செய்து பக். 21

## உயிர் நீத்த புலிகளை நினைவு கூரத் தடை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு, நவம்பர் 26
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப் பாகும். எனவே, பொது இடங்களில் உயிர் நீத்த புலிகளை நினைவுகூரு வது, புலிகளை நினைவுகூரும் சுவ ரொட்டிகளை ஒட்டுவது சட்டத்துக்கு எதிரானதாகும். இது தொடர்பில் பொலிஸார் அவதானத்துடன் இருக் கின்றனர். சட்டத்துக்கு எதிராகச் செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர நேற்று உதய னிடம்தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நாளைமறுதினம் (நாளை) மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதுதானே?" என்று அவரிடம் வினவியபோதே, எமக்கு அவ்வாறு தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால், மூன்று, நான்கு நாள்களுக்கு முன்னர் வவுனியா பக். 21

## மோ.சைக்கிளில் திடீரென பிறேக் பிடித்ததால் தூக்கி வீசப்பட்டவர் சாவு

யாழ்ப்பாணம், நவ. 26
மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றவர் திடீரென பிறேக் பிடித்த தால் தூக்கி வீசப்பட்டுப் படுகாயம டைந்த நிலையில், சிகிச்சை பயன ளிக்காது நேற்று உயிரிழந்தார்.
யாழ்.நாச்சிமார் கோயிலடியை அண்மித்து கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற பக். 21

## எரிகாயமடைந்த குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், நவ. 26
முள்ளியவளையில் தற்காலிக குடி சையில் வசித்து வந்த குடும்பஸ்தர் தீ விபத்தில் காயமடைந்து சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்தார்.
முள்ளியவளை முறிப்பு பகுதி யைச் சேர்ந்த உதயகுமார் சுரேஸ் (வயது 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். இவர் 2 வயதுக் குழந்தையின் தந் தை யாவார். பக். 21

# கேட்டதோ 7,978 மில்லியன் 3,199 மில்லியனே ஒதுக்கீடு

## வடக்கின் அடுத்த ஆண்டு அபிவிருத்திக்கு

யாழ்ப்பாணம், நவ. 26
வடக்கு மாகாண சபையினால் அபி விருத்தி வேலைகளை முன்னெடுக்க அடுத்த ஆண்டுக்கு 7 ஆயிரத்து 978 மில்லியன் ரூபா தேவை என்று வேண்டு கோள் விடுத்திருந்த நிலையில், கொழும்பு அரசினால் 3 ஆயிரத்து 199.3 மில்லியன் ரூபா நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வரவு - செலவுத் திட்டம் அரசி னால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுவதற்கு முன்பாக, ஒவ்வொரு மாகாண சபையும், தங்களுக்குத் தேவையான நிதி மதிப்பீட்டை மத்திய அரசிடம் சமர்ப் பித்திருந்தன. அந்த வகையி லேயே வடக்கு மாகாண சபை தனது 5 அமைச்சுக்களினூடான அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு 7 ஆயிரத்து 978 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்து, சமர்ப்பித்திருந்தது.

அவ்வாறு சமர்ப்பிக் கப்பட்டபோதும், கொழும்பு அரசு 3 ஆயிரத்து 199.3 மில்லியன் ரூபாவை வடக்கு அரசுக்கு வழங்கியுள்ளது.

விவசாய அமைச்சு ஆயிரத்து 172 மில் லியன் ரூபா தேவை என்றும், சுகாதார அமைச்சு ஆயிரத்து 782 மில்லியன் ரூபா தேவை என்றும், மீன்பிடி அமைச்சு ஆயிரத்து 235 மில்லியன் ரூபா தேவை பக். 21




*தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 61 ஆவது பிறந்த நாளுக்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்றுக் கிளிநொச்சியில் துண்டுப் பிரசுரங்கள் போடப் பட்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். கிளி நொச்சி, விசுவமடு, சுண்டிக்குளம் பகுதிகளிலேயே இந்தத் துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டதாகவும் கூறப் பட்டது. (த-21)*



*கார்த்திகை தீபத்திருநாளான நேற்று திருக்கார்த்திகை உற்சவம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற் றது. இதன்போது முத்துக்குமார சுவாமி எழுந்தருளி சுவர்க்கப் பாவனை எரிப்பு ஆலய முன்றிலில் இடம் பெற்றது. (த)*

## காணாமற்போனோரின் உறவுகளை விசாரணை செய்தமை கண்டிக்கத்தக்கது

### ஐரோப்பிய ஒன்றியம் கவலை

கொழும்பு, நவ.26
காணாமற்போனவர்களின் உற வினர்களை இலங்கை அரச அதிகாரிகள் விசாரணைக்கு உட் படுத்தியமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட் டுள்ளது. தமது பிரதிநிதிகளை சந்தித்திருந்த குடும்பங்களையே அதிகாரிகள் இவ்வாறு விசார ணைக்கு உட்படுத்தியுள் ளதாக ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழு வின் தலைவர் டேவிட் டலி தெரி வித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஆடை ஏற்றுமதியாளர்களின் உதவி பொது பக். 21

# மணற்காட்டில் தங்கப் புதையலா?

### ஆராய்வதற்காக இன்று அங்கு தோண்டும் பணி

யாழ்ப்பாணம், நவ. 26
மணற்காடு பகுதியில், விடுத லைப் புலிகளுடையது என்று கூறப்படும் 600 கிலோகிராம் தங்கப் புதையல் உள்ளதாகச் சந் தேகிக்கப்படும் இடம் பருத்தித் துறைநீதிமன்றஉத்தரவுக்கமைய இன்று தோண்டப்படவுள்ளது.

அந்த இடத்தில் புதையல் உள்ளது பக். 21

## புலம்பெயர் நாடுகளில் பிரபாவின் பிறந்த தினம்

யாழ்ப்பாணம், நவ.26
தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனின் 61 ஆவது பிறந்த தினம் இன்று தமிழகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் கொண்டாடப்படுகின்றது.

வல்வெட்டித்துறையில் 1954 ஆம் ஆண்டு நவம் பர் 26 ஆம் திகதி பிறந்த வே.பிரபாகரன், வல்வெட் டித்துறை சிதம்பராக் கல் லூரியில் கல்வி கற்றார். தமிழ் மாணவர்க்ள் பாட சாலைக் கல்வியை முடித்த பிறகு மேற்படிப்புக்குச் செல்ல இலங்கை அரசின் மேற்கல்வித் தரப்படுத்தல் கொள்கை ஒரு தடையாக இருந்தது. இதனால் பிர பாகரன் விடுதலைப்போரா ளியாகச்செயற் படத்தொடங் பக். 21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மாவட்ட பாடசாலைகளில் மாணவரின் இடைவிலகல் அதிகம்

## வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், நவ.26

மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகுதல் மற்றும் ஒழுங்கான வரவு இன்மை போன்றன வன்னி மாவட்டப் பாடசாலைகளில் அதிகமாக காணப்படுகின்றது என்று வடக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு வலயத்தில் ஜிரி இசற் நிறுவனத்தால் நேற்று நடத்தப்பட்ட வவுனியா வடக்கு கல்வி வயலத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான உள விருத்தி தொடர்பான செயற்திட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வன்னி மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மணவர்கள் ஏதோ ஒரு வகையில் போரால் பாதிக்கப்பட்டவர்களாகவே உள்ளார்கள். இந்த மாணவர்கள் போர் முடிவடைந்த பின் முகாம்களில் இருந்தே பின்னர் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டார்கள்.

வவுனியா செட்டிகுளம் உட்பட முகாம்களிலே வைக்கப்பட்ட மாணவர்கள் சிலர் பாடசாலைக்கு செல்ல வேண்டும், கற்கவேண்டும் என்ற எண்ணத்தில் அங்கிருந்து வெளியில் வந்தார்கள். ஆனால் மற்றும் சிலர் குறித்த முகாம்களிலே பாலியல் நடத்தைகள் உட்பட பல புற விடயங்களைக் கற்றுக்கொண்டு வெளியே வந்தார்கள்.

அப்படிப்பட்ட மாணவர்கள் பாடசாலைகளில் சேர்க்கப்படும் போது அவர்களுக்குக் கல்வியிலே ஆர்வம் ஏற்படாது. எனவே பாடசாலைககு அவர்களுடைய வருகை குறைவானதாக இருக்கும். அத்தோடு மேலும் சிலர் குடும்ப வறுமை, ஏனையவர்களின் தூண்டல்களால் பாடசாலையில் இருந்து இடைவிலகி வேலைகளுக்கு செல்லத் தொடங்கிவிடுவார்கள்.

எனவே தான் வன்னி மாவட்டப் பாடசாலைகளில் இந்த இடைவிலகல் மற்றும் வரவில் ஒழுங்கின்மை போன்றவை அதிகமாக காணப்படுகின்றன. அனைத்து மாணவர்களும் கற்கக் கூடிய வகையில் வடக்கில் பாடசாலைகள அமைக்கப் பட்டுள்ளன. ஆனால் மாணவர்களின் பயன்பாடு போதுமானதாக இல்லை.- என்றார். (ந-21,ரி3)

# வலி. கிழக்கில் திருடர் கைவரிசை: பீதியுடன் இரவைக் கழிக்கும் மக்கள்

யாழ்ப்பாணம், நவ. 26

வலி.கிழக்குப் பிரதேசத்தில் திருடர்களின் தொல்லையால் மக்கள் இரவுப் பொழுதைப் பீதியுடன் கழித்து வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் திருடர்களின் தொல்லை இரவு வேளைகளில் அதிகரித்துள்ளதோடு பகல்வேளையில்வழிப்பறி கொள்ளையர்களின் கைவரிசையும் மறுபுறத்தில் அதிகரித்துள்ளது. அதனால் தாம் மிகவும் பீதியடைந்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, ஆவரங்கால், புத்தூர் போன்ற பகுதிகளிலேயே திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளன. கடந்த ஒரு மாதகாலமாக திருடர்களின் திருட்டுச் சம்பவங்கள் பிரதேசத்தில் தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

பட்டப்பகலில் அதுவும் நண்பகல் வேளையில் ஆள்கள் நடமாட்டம் குறைந்த வீதியால் செல்லும் பெண்களை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களில் செல்லும் திருடர்கள் சம்பந்தப்பட்ட பெண்களைத் தாக்கிவிட்டு அவர்கள் அணிந்திருக்கும் தங்க நகைகளை அபகரித்து தப்பிச் செல்கின்றனர்.

கடந்த வாரத்தில் மட்டும் கோப்பாய், சிறுப்பிட்டி, ஆவரங்கால் பகுதியில் இப்படிப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அதனைவிட கடந்த வாரம் நீர்வேலி உப அஞ்சல் அலுவலகத்தில் முதியோருக்கான இரண்டாயிரம் ரூபா மாதாந்த உதவித் தொகையைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பிய முதியோர் ஒருவரை திருடர்கள் தாக்கிவிட்டு அவரின் சேட் பொக்கற்றில் இருந்த அந்தப் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

அரசால் வழங்கப்படும் மாதாந்த 2 ஆயிரம் ரூபா தர்ம உதவித் தொகையையும் முதியவர் ஒருவர் பறிகொடுத்துள்ளார்.

அதனைவிட கோப்பாய் - இராச வீதி, கைதடி - மனிப்பாய் வீதி, நீர்வேலி - கரந்தன் வீதி, மாசிவன் வீதி, வடக்கு வீதி மற்றும் சிறுப்பிட்டி, ஆவரங்கால் போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளில் திருடர்கள் இரவு வேளைகளில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். அத்துடன் ஆவரங்காலில் வீடு ஒன்றில் கட்டியிருந்த ஆடு ஒன்றையும் திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

அதேசமயம், நீர்வேலி, கோப்பாய் பிரதேச தோட்டங்களில் மேய்ச்சலுக்காக கட்டி விடப்படும் கால்நடைகளும் இவ்வாறு காணாமற் போகின்றன என்று மக்கள் தெரிவித்தனர். திருடர்கள் பகல் வேளையில் இவ்வாறு ஆடு, மாடு போன்றவற்றை களவாடியும் செல்கின்றனர்.

இவை ஒருபுறமிருக்க பகல் வேளைகளில் பெண்கள் தங்கநகைகளை அணிந்து கொண்டு ஆள்கள் நடமாட்டம் இன்றிய வீதிகளில் பயணிப்பதைத் தவிர்க்கவேண்டும் என்று கிராம உத்தியோகத்தர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தப் பகுதியில் இடம்பெறும் திருட்டுக்களைத் தடுப்பதற்கு கிராம உத்தியோகத்தர் தலைமையில் விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கு வலி. கிழக்கு பிரதேச செயலர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-17)

# சைக்கிள் திருட்டை தடுக்குமாறு கோரிக்கை

கரணவாய், நவ.26

நெல்லியடி நகரப்பகுதியில் அடிக்கடி இடம்பெறும் சைக்கிள் திருட்டைக் கட்டுப்படுத்த சம்பந்தப்படடவர்கள் உடன் நடவடிக்கைளடுக்கவேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக நெல்லியடி நகரப்பகுதியில் நிறுத்தி வைக்கப்படும் சைக்கிள்கள் பட்டப்பகலில் மாயமாக மறைகின்றன. கடந்த மூன்று நாள்களுக்குள் இவ்வாறு மூன்று சைக்கிள்கள் இனந்தெரியாதவர்களால் களவாடப்பட்டுள்ளன.

நெல்லியடி பஸ் தரிப்பிடத்துக்கு அண்மையில் உள்ள பத்திரிகை விற்பனை நிலையம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உரிமையாளரின் சைக்கிளும் எரிவாயு விற்பனைநிலையத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளும் உணவகம் ஒன்றின் முன்பாக சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டு உணவருந்திக் கொண்டிருந்தவரின் சைக்கிளும் களவாடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்டுகின்றது.

இச்சம்பவங்கள் தொடர்பாகநெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-108)

### திருக்கேதீஸ்வர மடாலய சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.26

திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரி மட பரிபாலன சபை யின் வருடாந்தப் பொதுக் கூட்டம் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி மடத்தில் நடைபெறும். அங்கத்தவர்களைக் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## காலம் தந்த காவலன்

காலம் தந்தது ... ஒரு
காவலனை
கார்த்திகை 26 ல்... ... ...

மேகம் சூழ்ந்த பொழுதுகளை
மின்னலாய் இடித்து
மழையாய் பொழிய வைத்தவன்... ... ...

கர்ச்சிக்கும் மிருகங்களிடம் இருந்து
காட்டு ஜீவராசிகளை மீட்டு
கானகத்தை வாழ வைத்தவன்... ... ...

போட்டி போட்டு வந்த
காட்டிக் கொடுப்புகளால்
காவு கொள்ளப்பட்டவன்... ... ...

உருவத்தில் அகற்றப்பட்டிருக்கலாம்
அதனைத் தமிழர் உள்ளத்திலிருந்து
அகற்ற முடியவில்லை அவர்களால்... ... ...

காலம் தந்த காவலன் கனவுகளை
நனவாக்கும் நாளை
கனிய வைப்போம் நாம் ... ... ...

உலகத்தமிழனின் மானம் காக்க
உதயமானவன் நினைவுகளை
நெஞ்சத்துள் நிறைத்து வாழ்த்துவோம் ... ... ...

ஆற்றல் நாயகன் அவதரித்த இன்னாளில்
அகிம்சை வழி உறுதியெடுப்போம்
தமிழர் உரிமைக்காக ... ... ...

புலோலியூர்
காவியா

# வட்டுக்கோட்டையில் இலவச பல் மருத்துவ முகாம்

## நூற்றுக்கும் மேற்பட்டோர் பயன்பெற்றனர்



யாழ்ப்பாணம், நவ.26

26 பல் மருத்துவர்கள் பங்கு கொண்ட கொண்ட இலவச பல் மருத்துவ முகாம் நேற்று வட்டுக்கோட்டையில் சிறப்பாக நடைபெற்றது.

கண்டி றோட்டறிக்கழகமும், யாழ்ப்பாண றோட்டறிகழகமும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த இலவச பல் மருத்துவ சிகிச்சையை யாழ்- கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவருமான ஈ.சரவணபவன் ஆரம்பித்துவைத்தார்.

கண்டி பேராதனைப் பல்கலைகழகத்தில் பல் மருத்துவத் துறையில் இறுதி ஆண்டில் கல்விகற்று முடித்த 24 மருத்துவ மாணவர்களும் 2 மருத்துவர்களுமாக 26 மருத்துவர்கள் இந்த சிகிச்சைகளை வழங்கினர்.

பற்களில் ஏற்படும் பாதிப்புக்கள், பற்களை எவ்வாறு பயன்படுத்துவது, போன்ற விளக்கங்கள் வழங்கப்பட்ட பின்னர் நோயாளர்களுக்கு பல் மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

இதன் போது வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், முன்பள்ளி சிறார்கள் என சுமார் 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பற்களுக்கு தேவையான சிகிச்சைகளைப் பெற்றுச் சென்றனர். அத்தோடு கண்டியில் இருந்து வருகை தந்த மருத்துவ மாணவர்களது சேவையைப் பாராட்டி நாடாளுமன்ற உறுப்பினரால் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.- கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவருமான ஈ.சரவணபவன், கண்டி றோட்டறியை சேர்ந்த றோட்டறி முன்னான் ஆளுநர் மருத்துவர் விஜயகுமார், யாழ்ப்பாண றோட்டறிக் கழகத் தலைவர் அனுராஜ், றோட்டறிக் கழக உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற-21)

# பிள்ளையானுக்கு மூன்று மாதம் விடுமுறை

கொழும்பிலுள்ள குற்றப் புல னாய்வுத் துறைத் தலைமைய கத்தில் பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ், தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவரும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் மாகாண சபையின் தற்போதைய உறுப்பினருமான சிவநேச துரை சந்திரகாந்தனுக்கு 3 மாதகால விடுமுறை வழங்குவதற்கு கிழக்கு மாகாண சபை அனுமதியளித்துள்ளது.

இம்மாத அமர்வுக்காக பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தலைமையில் கிழக்கு மாகாண சபை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கூடியபோது, ஐ.ம.சு. முன்னணி உறுப்பினரான கே.புஸ்பகுமார் (இனியபாரதி இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

இது மாகாண சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சந்திரகாந்தனுக்கு 3 மாதகால விடுமுறை அளிக்கச் சபை அனுமதியளித்ததாக கே.புஸ்பகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக சிவநேசதுரை சந்திரகாந்தன், கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்ட நிலையில் கைதுசெய் யப்பட்டு, கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலைக் கழிவு நீரால் பொதுமக்கள் பெரும் சிரமம்

## முத்தமிழ் வீதி முதலாம் ஒழுங்கை வெள்ளத்தில் மிதக்கின்றது



யாழ்ப்பாணம், நவ.26

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் குடியிருப்புப் பகுதிகளுக்குள் வருவதால் கொட்டி முத்தமிழ் வீதி முதலாம் ஒழுங்கையில் வாழும் 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தப் பகுதி பள்ளக் காணிகளாகும். தற்போது அருகில் சிறைச்சாலை கட்டப்பட்டு, ஒரு மாத காலத்துக்கு முன்னர்தான் திறக்கப்பட்டது. அவர்கள் பாவனைக்குப் பயன்படுத்தும் நீர் எமது குடியிருப்புக்குள் விடப்படுகின்றது. நீர் வடிந்தோட இடமில்லாத நிலையில் இந்த ஒழுங்கை முழுவதும் கழிவு நீர் தேங்கியுள்ளது - என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இங்கு 15க்கும் மேற்பட்ட கைக் குழந்தைகள் உள்ளனர். பெரியவர்கள் நோய்கள் ஏற்பட்டால் ஓரளவு தாங்கிக்கொள்வார்கள். குழந்தைப் பிள்ளைகள் தொற்று நோய்க்கு உள்ளாகும் அபாயத்துக்கு ஆளாகியுள்ளனர். இது தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமும் முறையிட்டோம். ஒரு சில அதிகாரிகள் கழிவு நீருக்குள் கால் வைக்கவே பயப்படுகின்றனர். நாங்கள் அப்படியான இடத்தில்தான் வாழ்கிறோம். யாரும் இது குறித்துச் சிந்திப்பதில்லை. மழை காலத்தில் இந்தப் பகுதியில் நுளம்புகள் பெருக்கெடுக்கும். இப்படி நாள் முழுதும் கழிவு நீர் வீடுகளுக்குள் நின்றால் டெங்கு வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். மாநகர சபையில் இருந்து வருவார்கள், சிரட்டைக்குள் தண்ணீர் நிற்கிறது, டெங்கு வருகின்றது என்று. போதாததற்குத் தண்டப்பணமும் அறவிட்டுக்கொள்வார்கள். அவர்களுக்கு சிறைச்சாலையில் இருந்து வெளிவரும் கழிவு நீர் கண்களில் படுவதில்லை. போதாததற்கு இராணுவத்தினர் புற்தரைகளைக் கொத்திக் கொண்டுபோவார்கள். ஏற்கனவே பள்ளக்காணியாக இருக்கும் இந்தப் பகுதி இன்னும் பள்ளமாகிக்கொண்டே போகின்றது. - என்று அவர்கள் கொதிப்புடன் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி கிராம சேவகர் சேந்தனிடம் கேட்டபோது இது குறித்து பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன் என்று தெரிவித்தார்.

பிரதேச செயலர் நேரில் சென்று சிறைச்சாலை அதிகாரிகளுடன் பேசியிருந்தார். சிறைச்சாலை கழிவு நீர் வெளியேற வடிகால்கள் அமைக்கப்பட வேண்டும். - என்றும் அவர் தெரிவித்தார். (ந-10)

# சமரசிங்கவுக்கு அச்சுறுத்தல்; தூதரகங்களில் முறைப்பாடு

கொழும்பு,நவ.26

அபாயகரமான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இருந்த மருத்துவர் நிலங்க சமரசிங்க. அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர், தமக்கும் தமது குடும்பத்தவர்களுக் கும் உயிர் அச்சுறுத்தல் ஆபத்தொன்று இருப்பதால் பாதுகாப்புக் கோரி இலங்கையில் உள்ள ஐந்து தூதரகங்களுக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார். இலங்கையில் அமைந்துள்ள பிரிட்டன், நோர்வே, கனடா ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கத் தூதரகங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை இது குறித்து தாம் அறிவித்திருப்பதாக முன்னாள் தலைவர் கொழும்பின் சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். தாம் தலைவராகப் பதவியேற்று 10 மாத காலத்துள் போதைப் பொருள்களை ஒழிப்பது தொடர்பான திட்டங்கள் சிலவற்றை நடை முறைப்படுத்துவதற்கு ஆயத்தமான போது இவ்விதம் தாம் திடீரென அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கான காரணம் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-22)

# ஒரு வாகனத்தில் குறைந்த பட்சம் 4 பயணிகள் இருத்தல் வேண்டும்

கொழும்பு,நவ.26

நகர்களுக்குள் பிரவேசிக்கும் ஒரு வாகனத்தில் குறைந்த பட்சம் 4 பயணிகளாவது இருத்தல் வேண் டும் என்ற பிரேரணை 2016 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. நகர்களில் வாகன நிறுத்தல் வசதிகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரவுள் ளது. இந்த வசதியை ஏற்படுத்துவதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குள் நடைமுறைப்படுத்தவுள்ளதாக முன்மொழி யப் பட்டுள்ளது. இந்த வசதிகள் செய்து கொடுக் கப்பட்டதன் பின்னர் நகர்களுக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது 4 பேர் காணப்படாவிடின் அதற்கு தண்டப்பணம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என வும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சட்டவிரோத வலைகளால் தீவுப் பகுதிக் கடலில் மீன்பிடி

## முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என நீரியல் வள திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், நவ.26

தீவுப்பகுதிக் கடலில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று யாழ்.கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கடற்பகுதியில் வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

கூடுதலாக சாவற்கட்டு, நாவாந்துறை, காக்கைதீவு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் சிலரே தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசால் தடைசெய்யப்பட்ட இந்தத் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதை மீனவர்கள் உடனடியாகத் தவிர்க்க வேண்டும்.

கடற்பகுதியில் மேற்கொள்ளப்படும் திடீர் சோதனையின்போது இந்தத் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழி லில் ஈடுபடுவோர் மீது சட்ட நட வடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-17)

# புதிய அரசும் ஏமாற்றுகின்றது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, நவ.26

வவுனியா மாவட்ட அரச அதிபர் நியமனத்திலேயே தமிழர்களுடைய கோரிக்கையை ஏற்காத புதிய அரசு ஏனைய விடயங்களில் சாதகமான முடிவுகளை எடுக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை, இந்த அரசும் முந்தைய அரசைப் போலவே ஏமாற்றி வரு கின்றது. - இவ்வாறு வவுனியா மாவட் டத்தை சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபரின் நியமனத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து நேற்றுக் காலை வவுனியா சுவர்க்கா விருந்தினர் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரசியல் கைதிகளின் விடுதலை, நிலங்களை விடுவித்து மீளக் குடியேற்றல், அரச அதிபரின் இடமாற்றம் உள்ளிட்ட விடயங்களில் புதிய அரசு நடந்து கொள்ளும் விதம் எமக்கு மிகுந்த வேதனை யையும், ஏமாற்றத்தையும் அளிக் கின்றது.

கடந்த பத்து மாதங்களாக வவுனியா மாவட்ட அரச அதிபரை மாற்றி தமிழர் ஒரு வரை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம்.

அந்தக் கருமங்கள் நிறைவேறாத படியால், கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட உரை மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரை அவரது அலுவலகத்தில் சந்தித்து மேற்படி விடயங்கள் குறித்தும் குறிப்பாக வவுனியா மாவட்ட அரச அதிபர் மாற்றம் தொடர்பாக விவாதித்தபோது, பிரதமர், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் பொது நிர்வாக அமைச்சரை அழைத்து குறித்த விவகாரம் தொடர்பில் வினவினார்.

எமது ஆட்சேபனையை தெரிவித்தன் பின்னர் பிரதமரின் முன்னிலையில் அமைச்சர் எங்களிடம் கால அவகாசம் கேட்டுக்கொண்டார். அதற்கு நாங்கள் உடன்படாமையால் 23 ஆம் திகதி குறித்த அரச அதிபரை மீள அழைத்து தமிழர் ஒருவரை நியமிப்பதாக உறுதியளித்தார். ஆனால் சிங்கள மொழி பேசும் பெரும்பான்மை இனத்தவர் வவுனியாவில் கடமையேற்றுக் கொண்டுள்ளார். இந்த நியமனமானது தமிழ் மக்களை யும் ஏமாற்றும் நடவடிக்கையாகவே எம்மால் பார்க்க முடிகின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்திலும் இவ்வாறுதான் எமக்கு ஏமாற்றமளிக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் சத்தியலிங் கம், மாகாணசபை உறுப்பினர் களான லிங்கநாதன், தியாகராசா, இந்திரராசா, நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-21)

# போர் ஓய்ந்ததன் பின்னரும் வடுக்களைச் சுமக்கிறோம்

## மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவிப்பு

போர் ஓய்ந்து 6 வருடங்கள் ஆகியும் போரின் வடுக்களை இன்னும் நாம் சுமக்கிறோம் என்று தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி.

மருத்துவர் எஸ்.சிவதாஸ் எழுதிய சிறுவர்களுடன்" எனும் நூல் வெளி யீடு நேற்று வவுனியா நகர சபை கலாசாரமண்டபத்தில் நடை பெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது-

போர் வடுக்கள் சிறுவர்களைப் பாதித்துள்ளன. அதன் எச்சங்களை நூல் வாயிலாக நாம் அறியலாம். தொலைபேசிப் பாவனை, தொலைக்காட்சிப் பாவனை இன்றைய சிறுவர்களைப் பாதித்துள்ளன. படிப்பில் சிறுவர்களுக்குப் பெற்றோர் கொடுக்கும் கடும் அழுத்தம் அவர்களைப் பாதித்துள்ளது. சிறுவர்களை சிறுவர்களாக நடத்த வேண்டும் என்று நாம் கற்றுக் கொள்ளவேண்டும் - என்றார். (ந-402)

# நீரில் மூழ்கி மாணவன் சாவு

கொழும்பு,நவ.26

மலையகத்தில் நான்கு நண்பர்களுடன் குளமொன்றில் நீராடிக்கொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி சாவடைந்துள்ளார். நாரமல்ல, பொல்வத்தேகெதர பிரதேசத்தில் வசிக்கும் எம்.எவ்.கயான் மடுசங்க ஹேரத் (வயது-17) என்ற மாணவன், களுந்தாவ பிரதேசத்திலுள்ள குளமொன்றில் நான்கு நண்பர்கள் சகிதம் நீராடச் சென்றுள்ளார். அதன்போது அந்தக் குளத்தில் நீரில் மூழ்கவிருந்த சிறுமியொருத்தியை அவர்கள் சிரமத்தின் மத்தியில் காப்பாற்றியுள்ளனர். எனினும், சிறுமியை மீட்ட சிறிது நேரத்தில் குறித்த மாணவன் அதே குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை வயற் காணியில் தரையிறங்கிய மர்மப்பொருள்

கொழும்பு, நவ.26

கடந்த 18 ஆம் திகதி இரவு அம்பாறை கோணாகொல்ல கிராமத்தில் உள்ள வயற்காணியொன்றில் 20 மீற்றர் வரையிலான நீளத்துக்குத் தென்பட்ட மர்மப்பொருளொன்று நிலத்தில் பதிந்ததால் அடையாளம் ஏற்பட்டுள்ளது என்று இனங்காணப்படாத பறக்கும் பொருள்கள் சம்பந்தப்பட்ட இலங்கை ஆராய்ச்சிகள் சங்கம் (S.L. U.F.O.R.A) தகவல் வெளியிட்டுள்ளது.



அன்றைய தினம் இரவு ஏதோ ஒரு மர்மமான பொருள் இந்த இடத்தில் இறங்கியுள்ளது என்று கிராமவாசிகள் தெரிவித்தமைக்கு அமைய, அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நான்கு அடி அகலமுள்ளதாகத் தென்படும் இந்த அடையாளம் ஒரு மர்மமான சம்பவமென்றே குறிப்பிட முடியுமென்று இது சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த மேற்படி சங்கத்தின் ஆய்வு அதிகாரியானசாலிய டி சில்வா தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாடுகளில் சோளம் செய்கை பண்ணைப்படும் விவசாய நிலங்களில் இதுபோன்ற மர்மமான காட்சிகளைக் காணக் கூடியதாக உள்ளது. ஆனாலும், இது அதைவிட முற்றிலும் வித்தியாசமான காட்சியொன்றாகும். வெளிநாடுகளில் காணக்கூடிய இந்த செய்கை அடையாளங்கள் சம்பந்தமாக கருத்து வழங்கும் ஆய்வாளர்கள், மனிதர்களால் எண்ணிப் பார்க்கக்கூட இயலாத மர்மமான சக்தியொன்றால் இவை ஏற்படுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கின்றனர்.

எனவே, அம்பாறை கோணாகொல்ல வயல்நிலத்திலும்கூட பதிந்துள்ள இந்த அடையாளமானது ஏதோ வொரு மர்மப் பொருள் நிலத்தில் மோதியதால் ஏற்பட்டிருக்கக் கூடும் என அனுமானித்துக் கொள்ளமுடி கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


இத்தகைய சம்பவமொன்றை முதற்தடவையாக இலங்கையில் காணமுடிந்துள்ளது என் றாலும், இந்த மர்மப் பொருள் எதற் காக இங்கு வந்துள்ளது? இது வேற்றுக் கிரகமொன்றின் விமானமொன்றா? இந்த அடையாளத்தின் மூலம் வெளிப்படும் உண்மை என்ன? என்ற விடயங்கள் சம்பந்தமாக எம்மால்கூட உறுதியான முடிவொன்றுக்கு வரமுடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-22)

## நல்லாட்சி அரசை வீழ்த்த பலர் காத்திருக்கின்றனர்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.26

நல்லாட்சிக்கான தேசிய அரசை வீழ்த்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பலர் எதிர்பார்த்துள்ளனர் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

மக்களின் எதிர்பார்ப்பு, தேவைப்பாடு என்பவற்றை நிறைவேற்றவே நாங்கள் பதவிக்கு வந்தோம்.

எங்களது செயற்பாடுகளை முன் எடுக்கின்றோமா? இல்லையா? என்பது எங்களுக்கு தற்போது சவாலாகவுள்ளது.

அதனை எவ்வாறு செய்வது என்பது தொடர்பில் நாங்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். அதிகாரத்தை பெற்றுக் கொள்வது மிகவும் சுலபம். எமது ஆரம்பம் சிறப்பானது. இருப்பினும் எம்மை வீழ்த்துவதற்கு பலர் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

எனினும் அதனைப் பாதுகாத்து, குறிக்கோள் மற்றும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவது மிகவும் கடினமான விடயமாகும். என்றார். (ற)



முன்பள்ளி பருவ விருத்தி நிலைய ஆசிரியர்களுக்கு, சிறார்களின் கலை நிகழ்ச்சிச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிநெறியொன்று ஏறாவூர் பிரதேச சமூக சேவை நிலையத்தில் நேற்று நடைபெற்றுள்ளது. ஏறாவூர் பிரதேச செயலக முன்பள்ளி பருவ அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 36 முன்பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 60 ஆசிரியைகள் கலந்துகொண்டார்கள். (ற)

## எதிர் கொள்வதற்கு தயார்

### நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ரவி கருணாநாயக்க கருத்து

கொழும்பு, நவ.26

தனக்கு எதிராக கொண்டுவரத் திட்டமிடப்பட்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக் கத் தாம் தயார் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் இது தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு–செலவு திட்டம் தொடர்பாக அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியில் செயற் படுகின்றவர்களால் கூறுவதற்கும், செய்வதற்கும் ஒன்றும் இல்லாமையால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர முயற்சிக்கின்றனர் என்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளது.

அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்திருந்தார். (ற)

## மாணவர் கௌரவிப்பை நடத்தக்கோரி வவுனியாவில் பெற்றோர் கவனவீர்ப்பு

வவுனியா, நவ.26

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த 34 மாணவர்களை, கௌரவிக்கும் நிகழ்வை நடத்தக்கோரி பெற்றோர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். காரணங்கள் எதுவுமின்றிநிறுத்தப்பட்டுள்ளகௌரவிப்பு நிகழ்வு கடந்த வருடம் நடைபெற்றது போன்று இந்த வருடமும் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, வவுனியா வலயக் கல்விப் பணிமனையில் கடிதம் ஒன்றையும் அவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

கடந்த ஆறாம் திகதி மேற்படி விழா தொடர்பாக திகதி குறிக்கவென எம்மை அழைத்தனர். இந்தக் கூட்டத்துக்குப் பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளரும் உறுப்பினர்களும் வந்திருந்தனர். இதன்போது இனி மேற்படி விழாவை நடத்தப் போவதில்லை என்று அவர்கள் கூறியபோது பெற்றோர்களாகிய நாம் எமது அதிருப்தியை வெளியிட்டோம். எனினும் எவ்வித முடிவும் இன்றி கூட்டம் முடிவடைந்தது.

அதன் பின்னர் பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து இவ்விழாவைக் கொண்டாடவேண்டும் என வலியுறுத்தியபோது அதிபர் சாதகமான பதிலைத் தருவதாக கூறியபோதும் இதுவரை எவ்விதமான பதிலையும் தரவில்லை. இவர்கள் காலத்தை இழுத்தடித்து வருவதால் மாணவர்களும் பெற்றோர்களும் உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிபரைச் சந்தித்து மீண்டும் கலந்துரையாடியபோதும் எமக்கு சாதகமான எந்தவொரு பதிலையும் அதிபர் தராதது ஆர்வத்துடன் கற்ற மாணவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பாடசாலையின் நிதி ஏதும் இல்லாமல் நிர்வாக அனுமதியையும் நிகழ்வுக்கான இடத்தையும் மட்டுமே எதிர்பார்த்த பெற்றோருக்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

எமது பிள்ளைகளின் ஏக்கத்தைத் தீர்க்கும் வகையில் பொருத்தமான சாதகமான பதிலொன்று விரைவில் கிடைக்காதவிடத்து இந்த ஆண்டிலேயே குறித்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் பொருத்தமான முறையில் பொருத்தமான இடத்தில் நாம் கௌரவிப்பதில் தவறேதும் இருக்காது என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு தருகின்றோம் என்றுள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக நாம் பாடசாலைசமூகத்துடன் தொடர்புகொள்ள முற்பட்டபோது அவர்களுடனான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. (ற-ரி5,422)

## அரசின் அழுத்தத்தாலேயே விகாரைக்குச் செல்கிறேன்

### மகிந்த கூறுகின்றார்

கொழும்பு, நவ.26

நல்லாட்சி அரசால் என்மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் காரணமாகவே நான் விகாரைகளுக்குச் செல்கின்றேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



காலி தெல்லம்புர பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற மதவழிபாட்டு நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

நல்லாட்சி அரசு என்னைப் பழிவாங்கும் நோக்கில் என்னை உளரீதியாக பாதிப்படையச் செய்யும் வகையில் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

இந்த அழுத்தங்களை சமாளிக்கும் நோக்கில் நான் விகாரைகளுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுகின்றேன். தற்போதைய அரசு குரோத அரசியலை முன்னெடுத்து வருகின்றது.

குரோத அரசியலைக் கைவிட்டு மக்களுக்கு நலன்களை வழங்கும் வகையில் புரிந்துணர்வுடன் அரசு செயற்பட வேண்டியது அவசியமானது என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்துள்ளதால் அடிபணிந்துள்ளது ஐ.நா.

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகிறார்

கொழும்பு, நவ.26
போட்டி அரசியலை மறந்து இலங்கையில் சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதால், இலங்கை விடயத்தில் ஐ.நா. சபை அடிபணிந்து நிற்கின்றது என்று பெருந்தெருக்கள் அபிவிருத்தி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற அபிவிருத்தித் திட்டங்களின் அங்குரார்ப்பண நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இணக்கப்பாட்டின் ஊடாக அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் இந்த நல்லிணக்கத் தேசிய அரசு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாடு பல்வேறு தரப்பினரை அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்துக்கும் உள்ளாக்கியுள்ளது டன், ஐக்கிய நாடுகள் சபை கூட இலங்கை தொடர்பான தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவும் செய்துள்ளது.



குறிப்பாக இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை கூட இப்போது எமக்கு அடிபணிந்த நிலையில் தான் நடந்து கொள்கின்றது. எங்களுக்கு சாதகமான சில தீர்மானங்களை எடுக்கும் அளவுக்கு மாறியுள்ளனர்- என்றார். (ற)

# வரவு- செலவுத் திட்டத்தை தோற்கடிக்க வேண்டும்

## சோமவன்ச அமரசிங்க கொதிப்பு

கொழும்பு, நவ.26
மைத்திரி, ரணில் தலைமையிலான கூட்டு அரசின் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது–மக்கள் மீது வரிச் சுமையைத் திணித்து, நாட்டை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள மைத்திரி, ரணில் தலைமையிலான கூட்டு அரசின் கன்னி வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட வேண்டும்.

நாட்டு மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இவ்வாறான ஒரு வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும். எனவே நாட்டை நேசிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் நாட்டைப் பொருளாதார ரீதியில் வலுப்படுத்த உரிய திட்டமோ அல்லது முன்மொழிவுகளோ செய்யப்படவில்லை. மக்கள் மீது வரியை அதிகரித்து மக்கள் நீண்ட காலம் அனுபவித்து வந்த சலுகைகளை ரத்துச் செய்து நாட்டை அபிவிருத்தி அடையச் செய்ய முடியாது தடுத்துள்ளது. - என்றார். (ற)

# மீன் ஏற்றுமதித் தடை விரைவில் நீங்கும்

## அமைச்சர் மஹிந்த அமரவீர நம்பிக்கை

கொழும்பு, நவ.26
ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள மீன் ஏற்றுமதித் தடை விரைவில் நீக்கப்படும் என கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தடை நீக்கப்படுவது தொடர்பில் இலங்கைக்கு வழங்கப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப்பட்டுள்ளதை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் உறுதிப்படுத்தியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு வந்திருந்ததுடன் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று தடையை நீக்கு வதற்கான பரிசோதனைகளை மேற் கொண்டனர் என்று குறிப்பிட்ட அவர், தடை நீக்கப்படுவதற்காக வழங்கப்பட்ட அனைத்து இலக்குகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்று ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தம்மிடம் தெரிவித்தனர் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

தடை நீக்கப்படுவது தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கு தமது அறிக்கையைக் குறித்த பிரதிநிதிகள் சமர்பிக்கவுள்ளனர் என்றும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ற)

# சிறுபான்மை மக்களுக்கு மட்டுமா பிரச்சினைகள்?

## கேள்வி எழுப்புகின்றது பொதுபல சேனா

கொழும்பு, நவ.26
இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு மாத்திரமா பிரச்சினைகள் இருக்கின்றன என பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

என்றும் இல்லாதவாறு இந்த அரசுக்கு ஓர் அவசரம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நாட்டை ஆளும் தலைவர்கள் யார் என்று கேட்கின்றோம்.



தேசிய அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சரவைக்கு, சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு புதுமையான ஓர் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு மாத்திரமா பிரச்சினைகள் காணப்படுகின்றன என நான் கேட்கின்றேன். கடந்த 100 நாள் அரசும், தற்போதைய நல்லாட்சி அரசும் தமிழர்களின் - சிறு பான்மையினரின் பிரச்சினைகளைக் குறித்து மாத்திரமே சிந்திக்கிறது. சிங்களவர்கள் மற்றும் பௌத்தர்களின் பிரச்சினை தொடர்பில் பேசியதை அவதானிக்க முடியவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில், நாட்டின் சிங்களவர்களின் தலையெழுத்து விளங்கவில்லையா என அத்துரலிய ரத்ன தேரரிடம் நாங்கள் கேட்க விரும்புகின்றோம்.

புத்தசாசன அமைச்சு உறங்கிக் கொண்டு இருக்கின்றது. மகாநாயக்க தேரர்கள் உறங்கிக்கொண்டிருக்கின்றார்களா?

நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம் எந்தவொரு நீதிமன்றத்துக்கும் செல்லப் போவதில்லை என்று: முடியும் என்றால் நல்லாட்சி அரசில் உள்ளவர்கள் வாருங்கள். எங்களை அழைத்துச் செல்லுங்கள். நாங்கள் தனிப்பட்ட தேவைகளுக்காக போராடவில்லை. பௌத் தர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்றோம்.

அரசியல் யாப்புக்கு அமைய சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ள அமைச்சர்கள் எவராவது பௌத்த சாசனத்தை பாதுகாப்பதாக உறுதியளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றார்களா? யாராவது வாய் திறக்கிறார்களா ? இது மிகவும் பாரதூரமானது - என்று தெரிவித்தார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பிறரது எதிர்ப்பைப் பொருட்படுத்த மாட்டீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வர்.

**இடபம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில்; வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகளின் நலனுக்காகப் பெண்கள் பாடுபடுவார்கள். .

**மிதுனம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு, தாய் வீட்டாரின் உதவி வந்து சேரும்.

**கடகம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். வாகனப் பயணம் இனிதாக அமையும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:** எதிரியையும் அரவணைத்துச் செல்வீர்கள். தொழில், வியாபாரத்தில், தடை விலகி, இலாபம் உயரும். உறவினர் வருகையால், மகிழ்ச்சி நிறைந்திருக்கும். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவார்கள்.

**கன்னி:** எதிர்கால வளர்ச்சி குறித்து, ஆலோசனை செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். தாயின் தேவை அறிந்து, நிறைவேற்றி வைப்பீர்கள்.

**துலாம்:** உறவினர் மத்தியில், பெண்கள் செல்வாக்குடன் திகழ்வர். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பர்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மாணவர்கள், போட்டியில் பங்கேற்று வெற்றி பெறுவார்கள்.

**தனுசு:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை உருவாகும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். அரசியல்வாதிகள், தொண்டர்களுக்காகச் செலவழிப்பார்கள்.

**மகரம்:** எவருக்கும் தகுதிக்கு மீறி, வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தி யைத் தரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள், அக்கறையுடன் படித்து முன்னேறுவார்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த செயல் நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனத்தில், மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**மீனம்:** இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பார்கள்.



## ‘யூ’ சான்றிதழ் பெற்ற படங்கள்

பசங்க, இஞ்சி இடுப்பழகி, புகழ் உள்ளிட்ட படங்கள் அண்மையில் தணிக்கைக்குச் சென்று க்ளீன் யூ சான்றிதழைப் பெற்றுள்ளன. ஆர்யா, அனுஷ்கா நடிப்பில் தமிழ், தெலுங்கு மொழிகளில் ஒரே நேரத்தில் தயாராகி வரும் படம் இஞ்சி இடுப்பழகி. தெலுங்கில் சைஸ் ஜீரோ என்ற பெயரில் வெளியாகிறது. கீரவாணி இசையமைக்கும் இந்தப் படத்தில் அனுஷ்கா குண்டுப் பெண்ணாக வித்தியாசமான தோற்றத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தைத் தொடர்ந்து தணிக்கைக்குச் சென்ற படம் பசங்க. சூர்யா, அமலாபால் சிறப்புத் தோற்றத்தில் நடித்து பாண்டிராஜ் இயக்கியிருக்கும் படமே பசங்க 2. ஹைக்கூ என்று முதலில் பெயரிடப்பட்டு தற்பொழுது பசங்க படத்தின் இரண்டாம் பாகம் என்று மாற்றப்பட்டது. பசங்க, மெரினாவைத் தொடர்ந்து பாண்டிராஜ் குழந்தைகளை மையப்படுத்தி எடுத்திருக்கும் படம். எந்த வித காட்சி நீக்கமுமின்றி யூ சான்றிதழ் பெற்று டிசெம்பர் மாதம் வெளியாகிறது. ஜெய் நடிப்பில் மணிமாறன் இயக்கிவரும் புகழ் படமும் தணிக்கை முடிந்துவிட்டது. அதுமட்டுமன்றி மிர்ச்சி சிவா நடிக்கும் 144, ராதாமோகன் இயக்கியிருக்கும் உப்புக்கருவாடு உள்ளிட்ட படங்களும் யூ சான்றிதழை ஏற்கெனவே பெற்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## பேஸ் புக்கில் பிடித்தவை...








பேருந்தில் பெண்களை உரசுவதற்காகவே
ஏறும் ஆண் மகனே!!!
எங்களை உரசுவதற்கு முன் கொஞ்சம் யோசி....!
நீயும் ஒரு பெண்ணுக்கு சகோதரனாய்...
தந்தையாய்....





100 கிலோ அரிசி மூட்டையைத் தூக்குபவனுக்கு அதை வாங்கச் சக்தி இல்லை.
100 கிலோ அசிரி மூட்டையை வாங்குபவனுக்கு அதைத் தூக்கச் சக்தி இல்லை.





எலேய், மரியாதையா ஓடிடு. சுடுதண்ணிய புடிச்சி மூஞ்சியில ஊத்திடுவேன். ஜெய் போலேநாத்.

பணம் இன்று வரும் நாளை
பாசம் என்றும் நிலையானது
பணத்துக்காய் பாசத்தை விற்றுவிடாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணைக் கட்டிப்பிடிக்க முற்பட்ட சந்தேகநபர் பொலிஸாரால் கைது

கொழும்பு,நவ.26
அவிசாவளைப் பகுதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலையின் குளியலறைக்குள் ஆடையின்றி நுழைந்து, பெண்ணொருவரைக் கட்டிப்பிடிக்க முற்பட்ட நபரொருவர், கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த ஆடைத் தொழிற்சாலையின் பெண் ஊழியர் ஒருவரையே இந்த நபர் இவ்வாறு கட்டிப்பிடிக்க முற்பட்டுள்ளார். பெண் ஊழியர் கூச்சலிட்டதால் ஏற்பட்ட பதட்ட நிலை காரணமாக சந்தேகநபர், மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளார். எனினும், தொழிற்சாலை ஊழியர்கள் தப்பித் துச் சென்ற சந்தேகநபரை, துரத்திப்பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். சந்தேகநபரைக் கைது செய்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் குறித்த நபர் உணவக மொன்றில் கொத்துரொட்டி தயாரிக்கும் ஊழியர் எனவும், இவருக்கு இரு மனைமார் உள் ளனர் எனவும் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை அவி சாவளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## சாவ. வைத்தியசாலைக்கு கட்டில்கள் அன்பளிப்பு

சாவகச்சேரி,நவ.26
சாவகச்சேரி வைத்தியசாலையின் விடுதிக்குக் கொண்டு வரப்படும் நோயாளர்களுக்குச் சிகிச்சை யளிக்கப் பயன்படுத்த சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான கட் டில்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இ.கிருஷ்ண காந்தாவின் நினைவாக அவரது உறவினர்களால் கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன. வைத்தியசாலையில் பாரிசவாத சிகிச்சைப் பிரிவு மற்றும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. இவற்றுக்கு பல்வேறு பொருள்கள் தேவைப்படுவதால் இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பொதுமக்கள் முன்வரவேண்டு மெனவும் வைத்தியசாலை நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
Best Wishes
எமது பாடசாலையின்
சிரேஷ்ட ஆசிரியை
திருமதி விமலாதேவி கணேசன்
அவர்கள் 27.11.1989 ஆம் ஆண்டு தொடக்கம்
இன்றுவரை 25 வருடங்கள் கல்வி கற்பித்து
வெள்ளிவிழாக் காணுகின்றமையையிட்டு
அவர்களை நாம் உளமாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
Congratulations
பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,
பாடசாலைச்சமூகம்.
யா/சித்தன்கேணி
ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

# நிறைவேற்று அதிகாரத்தால் நாட்டின் உறுதித்தன்மை பாதிப்பு

கொழும்பு,நவ.26
நிறைவேற்று அதிகாரம் அனைத்து விடயங்களில் தலையீடு செய்ததால், நாடு பின்னோக்கி நகர்ந்தது என உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிறைவேற்று அதிகாரத்தை நீக்கிவிட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச் சரவையில் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். ஜனாதிபதியும் பிரதமரும் சொல்வதைச் செய்யும் தலைவர்களாகத் திகழ்கின்றார்கள். போர் நிறைவின் பின்னர் நாட்டை பொன்னான ஓர் யுகத்துக்கு முன்னெடுத்துச் சென்றிருக்க முடியும். எனினும், உண்மையில் என்ன நேர்ந்தது. மக்கள் எதிர்பார்த்தவை நடைபெறவில்லை. நிறைவேற்று அதிகாரம் நாட்டின் சகல விடயங்களிலும் தலையீடு செய்தது. நீதிமன்றம், கல்வி உள்ளிட்ட பல விடயங்களிலும் தலையீடு செய்யப்பட்டது. இவ்வாறு சுயாதீனமாக இயங்க வேண்டிய நிறுவனங்களின் செயற்பாடுகளில் தலையீடு செய்யப்பட்டதனால் நாட்டின் உறுதித்தன்மைக்குப் பாதிப்பு ஏற்பட்டது. ஜனாதிபதி முறைமையை மாற்றியமைப்பது நாட்டு மக்கள் அடைந்த மிகப் பெரிய வெற்றியாகவே கருதப்பட வேண்டுமென அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (ஐ)


பாராட்டி வாழ்த்துகின்றோம்
16.11.2015 அன்று வலிகாமம் கல்வி
வலயத்தால் சாதனையாளர் விருது வழங்கிக்
கௌரவிக்கப்பட்ட எமது பாடசாலையின்
பகுதி நேர சித்திர ஆசிரியர்
திருமதி சிவதர்சினி கோகுலன்
அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் அவர்
மேன்மேலும் சிறப்படைய உளங் கனிந்த
வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்
வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/ மயிலணி ம.வி. சுன்னாகம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்
காரை ஊரி அ.மி.த.க.கலவன்
வித்தியாலயத்தின் மாணவச்
செல்வங்களின் கல்வி
வளர்ச்சியிலும், பெற்றோர் மத்தியில்
கல்வியின் தேவை பற்றிய
விழிப்புணர்வையும் ஏற்படுத்தி
கடந்த பன்னிரண்டு வருடங்களில்
எமது பாடசாலையை
" உலக அரங்கில் "
நிலை நிறுத்தி 23.11.2015
இடமாற்றம் பெற்று
சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கடமையேற்ற
எமது
அதிபர் இ.சிறீதரன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் இன்னும் பல
பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ அன்புடனும்
பண்புடனும் வாழ்த்துகின்றோம்.
" வாழ்க வளமுடன் வளர்க உங்கள் பணி "
பெற்றோர்கள், மாணவர்கள்



மு / சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை - புதுக்குடியிருப்பு
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2015
மாவட்டத்தில் அதி கூடிய தொகையை பெற்ற சாதனையாளரை பாராட்டுகின்றோம்




பாடசாலைச்சமூகம்
மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகை அலங்கரிப்பாளர்களுக்கு சைக்கிள்கள் வழங்கி வைப்பு

மன்னார்,நவ.26

மன்னார் மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் அங்கத்தவர்களில், தெரிவு செய்யப்பட்ட சுமார் 6 பேருக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் எமில் நகரில் உள்ள மன்னார் சிகை அலங் கரிப்பாளர் சங்கத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. விசேட தெரிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சங்க அங்கத்தவர்களுக்கான சைக்கிள்களை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தமது வருடாந்த குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து கொள்வனவு செய்து வழங்கி வைத்தார்.

(ஐ-56)

## கமநலக்காப்புறுதிச்சபையின் நிரந்தரக் காரியாலயம் வவுனியா மாவட்ட செயலகத்தில் திறந்து வைப்பு




வவுனியா,நவ.26

கடந்த பல வருடங்களாக கோவில்குளம் கமநல கேந்திர நிலையத்தில் செயற்பட்டு வந்த கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபைக்கான நிரந்தர காரியாலயம் வவுனியா மாவட்ட செயலகத்தில் கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச்சபையின் நிர்வாகப் பணிப்பாளர் பண்டுக வீரசிங்க தலைமையில் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள ரோகண புஸ்பகுமார மற்றும் முன்னாள் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர ஆகிய இருவரும் இணைந்து இந்தக் காரியாலயத்தைத் திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி ல. ஈஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் கிருபாசுதன், பிரதேச செயலர்கள் கா. உதயராஜா, ஜானக உதவி மாவட்ட செயலர் கமலதாசன், காப்புறுதிச் சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ். வீரசிங்க, வவுனியா– முல்லைத்தீவு மாவட்ட கமத்தொழில் மற்றும் கமநலக்காப்பறுதிச் சபையின் பதில் உதவிப்பணிப்பாளர் பு. பூரணச்சந்திரன் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், கமநலக் காப்புறுதிச் சபையின் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் நிகழ்வில் 18 பேருக்கான விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவும் அதிகாரிகளால் வழங்கி வைக்கப்பட்டது.

(ஐ)

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தானியல் றெக்சியன்**



நீவகத்தின் கண்மணியே
எமது பிரதேசத்தின் ஒளிவிளக்கே
கார்த்திகை மாதமதில்
காவுகொள்ள வந்தார்களா
முதுகெலும்பில்லாக் கயவர்கள்?
கூட இருந்து குழிபறித்தார்களா
நெஞ்சில் உரமற்ற கோழைகள்?
புற முதுகில் குத்தினார்கள்
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
அழுது நிற்கின்றோம் அண்ணா
"தர்மத்தின் வாழ்வுதனை
சூது கவ்வும்
மீண்டும் தர்மம் வெல்லும்"

உங்கள் இழப்பை தினம் தினம் நினைக்கும்
அப்பா,அம்மா, சகோதர, சகோதரிகள்,றெஜினா.
077 493 2643

நாரந்தனை மத்தி, ஊர்காவற்றுறை.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

26.11.2015



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 | 07 |
| 09 | 12 |
| 1945 | 2014 |


திதி: கார்த்திகை அபரபக்க பிரதமை

**திருமதி. சுப்பிரமணியம் நாகரத்தினேஸ்வரி**

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டாயோ அம்மா
ஆண்டொன்று மறைந்தாலும்
ஆறுமோ நம்மனது
மீண்டுமிங்கு வந்து உனதன்பை
தாராயோ அம்மா!

குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி கணேசு**

திதி: 26.11.2015

பாசத்தின் இருப்பிடமாய்
அன்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
அப்பா....
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை
விட்டு அகலாது அப்பா
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றீர்கள்
எங்கள் இதய தெய்வமே உங்கள்
ஆத்ம சாந்தியடைய
இறைவனடியைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மண்ணில் 27.06.1938

விண்ணில் 07.12.2014

குடும்பத்தினர்.
முத்தவிநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(66424)(11,15)

### நன்றி செலுத்தும் ஆராதனை



**செல்வி அனிட்டா வோடே**

மிஷனரி செல்வி அனிட்டா வோடே அவர்கள் 01.11.2015 அன்று சுவீடன் தேசத்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.11.2015) வெள்ளிக்கிழமை சுவீடன் தேசத்தில் நடைபெறும் அதே நேரம் அவரின் சேவைக்கு நன்றி செலுத்தும் ஆராதனை ஏலீம் சிறுவர் இல்லம். மெமோறியல் ஒழுங்கை மானிப்பாயில் மாலை 3.00 மணிக்கு நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருக்கின்றோம்.

மானிப்பாய் **ஏலீம் நிர்வாகம்**

## அடம்பன் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்

மன்னார்,நவ.26

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் பிரதேச வைத்தியசாலையில் உள்ள பல்வேறு பிரச்சினைகளை நிவர்த்தி செய்யக் கோரி அடம்பன் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டனர். இதன் போது அடம்பன் கிராம மக்கள் ஒன்று கூடி அடம்பன் பொலிஸ் நிலைய வீதியில் இருந்து பல்வேறு கோரிக்கைகள் எழுதப்பட்ட பதாகைகளுடன் அடம்பன் பிரதேச வைத்தியசாலை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். பின்னர் வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்று கூடிய மக்கள் பல்வேறு கோசங்களை எழுப்பினர். குறிப்பாக அடம்பன் பிரதேச வைத்தியசாலைக்கு இரவுபகல்சேவை செய்வதற்கு மூன்று நிரந்தர வைத்தியர்களை நியமனம் செய்து தருதல், இயங்காமல் இருக்கும் பிரசவ விடுதியை இயங்க வைத்து பிரசவங்கள், குறித்த வைத்தியசாலையில் நடைபெற வசதி செய்து தருதல், வைத்தியர்கள் தங்கு வதற்கான விடுதி வசதிகளை உடன் ஏற்படுத்தி தருதல், வைத்தியசாலைக்கு தேவையான அத்தியாவசிய வைத்திய உபகரணங்களை உடன் வழங்கி உதவுதல் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தனர். பின்னர் ஊர்வலமாகச் சென்றவர்கள் அடம்பன் கிராம மக்கள் சார்பாகத் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை, அடம்பன் பிரதேச வைத்தியரிடமும், மாந்தைமேற்கு பிரதேச செயலரிடமும் கையளித்தனர்.

(ஐ-56)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் மதியபோசன அழைப்பும்



அமரர்

**நீக்கிலஸ் ஸ்ரீபன் (ஜெயசிங்கம்)**

தோற்றம் 20.12.1952

மறைவு 27.10.2015

எம் குடும்ப பாசவிளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாய்
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையப்பா.

அன்னாரின் 31 ஆம் நாள் ஞாபகார்த்த நினைவாக இன்று (26.11.2015) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தொடர்ந்து தொண்ட மான்நகர் அந்தோனியார் ஆலயத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்தித் திருப்பலியிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.20, கிருஸ்ணபுரம்,
கிளிநொச்சி.

(66286)(11,15)

குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**முத்தையா தங்கவேல்**

(உடுத்துறை வடக்கு, தாளையடி)

தோற்றம் 08.09.1948

மறைவு 07.12.2014

கடந்த 07.12.2014 சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் முத்தையா தங்கவேல் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (26.11.2015) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு,
தாளையடி.

(63578)(11.15,17)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம்,நவ.26

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் தினமும் காலை 9.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து விநாயகப் பெருமானுக்கு இலட்சார்ச்சனை இடம்பெறும். தினசரி கிரியைகள் யாவும் பிரதம சிவாச்சாரியார் ந.இராசேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறும். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து மஹா கணபதி ஹோமமும் இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் இடம்பெறும். (ஐ)

## பிள்ளையார் கதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் ,நவ.26

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பிள்ளையார் கதை நூல், பிள்ளையார் பெருங்கதையை முன்னிட்டு இலவசமாக வழங்கப்படவுள்ளது என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். இதனைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பாடசாலைகள் , ஆலயங்கள், இந்து மன்றங்கள் கோரிக்கைக் கடிதங்களைச் சமர்பித்து நேரடியாகவோ, தபால் முலமோ பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்பின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில்பிள்ளையார் கதை எனக் குறிப்பிட்டு, 30 ரூபா பெறுமதியான முத்திரையுடன் , இலக்கம் 248,11 காலி வீதி கொழும்பு-04 இல் அமைந்துள்ள, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு அனுப்பிப்பெற்றுக்கொள்ள முடியும். (ஐ-ரி4)

## சிறுமியைக் கூட்டிச் சென்றவர் கைது

அளவெட்டி, நவ. 26

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியை சந்தேகப்படத்தக்க விதத்தில் அழைத்துச் சென்ற 43 வயது நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியை அதே இடத்தைச் சேர்ந்த 43 வய்து நபரொருவர் சிறுமியின் வீட்டிலிருந்து யாழ். பஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். இவர் வீட்டிலிருந்துதமதுமகளை அழைத்துக் கொண்டு செல்வதை அவதானித்த தாயார் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றதாகக் கூறப்படுகின்றது. குறித்த நபரைபஸ் நிலையத்தில் கண்ட அந்தச் சிறுமியின் தாயாரும் பொதுமக்களும் அந்த நபரை நையப் புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்த மேலதிக விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் சிறுவர் பெண்கள் பிரிவில் முறைப்பாட்டைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளனர். (ற-106)

# மீள்குடியேறி 4 வருடங்கள்; இதுவரை மின்சாரம் இல்லை

புதுக்குடியிருப்பு,நவ.26

புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தில் உள்ளசிவநகர்குடியிருப்பில்மக்கள் மீள்குடியேறி 4 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். கடந்த 4 வருடங்களாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார விநியோகம் பெற விண்ணப்பித்த போதிலும், இது வரையிலும் மின்சார விநியோகம்வழங்க ஆக்க பூர்வ நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். பல தடவைகள் மின் அத்தியட்சகர், மின் பொறியியலாளர்களோடு தொடர்பு கொண்ட போதிலும் எந்த விதமான முன்னேற்றமும் காணப்படவில்லை எனவும், இதனால் கல்வி கற்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் உட்பட அத்தியாவசிய நடவடிக்கைகளும், ஏனைய தொழில் முயற்சிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இதேவேளை இதுகுறித்து வடமாகாண சபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன. (ஐ-86)

# வறிய மாணவர்களுக்கு உதவுதொகை வழுங்கல்

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் க.பொ.த உயர்தர மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் முகமாக வறிய மாணவர்களுக்கு மாதாந்த உதவு தொகை வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கல்லூரியின் நூலக மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் கு.அரசரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இதில் முதல் தொகுதியாக வறுமைக் கோட்டின்கீழ் கல்வி பயிலும் 40 மாணவர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கி வைக்கப்பட்டது இந்த உதவு தொகையானது மாதாந்தம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அடுத்த மாதம் இந்த மாணவர் எண்ணிக்கையை 100 ஆக அதிகரித்து இதே உதவு தொகை தொடர்ந்து வழங்கப்படவுள்ளதாக இதன்ஒருங்கிணைப்பாளர் தவராசா காண்டீபன் தெரிவித்தார். (ஐ-102)

## காதணி கண்டெடுப்பு

யாழ்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்தினுள்ள 29 ஆம் இலக்க விடுதியில், காதணியின் ஒரு பாகம் கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் காரியாலய காசாளரிடம் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)


## சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர்

அருள்மிகு திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரண திருப்பணி வேலைகளுக்கென சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர் பணி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மதிப்பீடுகள் தயாரித்தல், கொடுப்பனவுச் சிட்டைகள் தயாரித்தல்/ செவ்வை பார்த்தல், முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்து வழங்குதல், நிபுணத்துவ ஆலோசனைகளுக்கேற்ப முறைப்படி வேலைகளைக் கண்காணித்து மேற்பார்வை செய்து அவர்களது முழுமையான திருப்திக்கேற்ப செவ்வனே நிறைவேற்றுவித்தல் போன்றன முக்கிய பணிகளாகும்.

தகைமைகள் :-

NDT / NCT யுடன் குறைந்தது ஐந்து வருட துறைசார் அனுபவம்.

இளைப்பாறிய துறைசார் அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம்.

வேதனம் :-

பேசித் தீர்மானிக்கலாம்.

தங்குமிட ஒழுங்கு செய்து தரப்படும்.

முடிவு திகதி :- 07.12.2015

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

தலைவர்:

அருள்மிகு திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை

திருக்கேதீச்சரம், மன்னார்.

071 867 1113

Email: ssram42@yahoo.com

(66302)(11.15.17)

## ஜீவக வாத தைலம் Jeewaka Vata Thailaya

முதுகுவலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு,நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும், வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம், காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25 ml 150 ரூபா | 50 ml 280 ரூபா | 100 ml 450 ரூபா

Manufactured & Marketed by Jeewaka Herbals
No.17/3, Wedagedara Koskandawala Yakkala
Ayu Lic No. 6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact : 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567

## சேவைநலன் பாராட்டு



செல்வி ஜெயரஞ்சினி செந்திவேல்

**சேவை விவரம்**

ஆசிரியராக - 05.08.1984 - 31.08.1991 - மட்/கலைவாணி ம.வி

01.09.1991 - 29.01.2014 - யா/யூனியன் கல்லூரி

பிரதி அதிபராய் - 30.01.2014 - 26.11.2015 - யா/யூனியன் கல்லூரி

**அதிபரின் ஆசிச் செய்தி**

செல்வி ஜெயரஞ்சினி செந்திவேல் அவர்கள் 1991 ஆம் ஆண்டிலிருந்து எமது கல்லூரியில் வணிகவியல்துறையில் கற்பித்து வருகிறார். யாழ்ப்பாணத்துக்கே உரித்தான மரபார்ந்த ஆசிரியத்துவத்தின் குறியீடாக கடந்த 26 ஆண்டுகள் இக்கல்லூரியில் சேவையாற்றி 27.11.2015 முதல் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

மாணவர்களது ஒழுக்கம், கற்றல், விழுமியம் மிக்க நடத்தைக்கோலம் என்பவற்றோடு இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளிலும் தனக்கே உரித்தான தத்துவார்த்த பின்னணியுடனும் பற்றுறுதியுடனும் மாணவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்தியவர்.

மாணவர்களது கல்வியடைவுச் சாதனைகள் மற்றும் இணைக்கலைத்திட்டச் சாதனைகளை தனது சாதனைகளாகவே கருதி பெருமையடைந்தவர். தனிமனித வாழ்க்கை மேம்பாட்டிற்கு மேலாக கல்லூரியானதிறுவனத்தின் மேம்பாடு முதன்மை யானது என்பதனை சக ஆசிரியர்கள் மற்றும் இளநிலை ஆசிரியர்கள் மத்தியில் வலியுறுத்தி வருபவர்.

சமகாலத்தில் கல்லூரி தனது சகாப்த நிறைவை கொண்டாடும் இவ் வேளையில் ஏறத்தாழ கால் நூற்றாண்டு சேவையை வழங்கிய ஆசிரியைக்கு கல்லூரியின் சமூகத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதோடு அவரது ஓய்வு காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வே.க.இரத்தினகுமார் (அதிபர்)

யூனியன் மாதா மடியில் உறுதியுடன் பணியாற்றி
வணிகத்துறையதனை வளமாக்கிய அன்னை நீர்
பதவிகளை விரும்பாது பணியதனை சிறப்பித்தீர்
பண்புடை மாணவரை பல படிகள் உயரவைத்தீர்
ஆசிரியப் பணியதனில் ஆசு இரியராய் பலர்வளர
ஆதரவு தந்த செந்திவேல் செவ்வேள் ஆசியுடன்
சிறப்புறவே வாழ்த்துகிறோம்

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பதிவு இல - J/1594 | பதிவுத் திகதி - 11.03.1972

### பதவி வெற்றிடம்

**01. பதவி - இலிகிதர் (01)**

| | |
|---|---|
| குறியீட்டு இல | - 302/13 (13/2015 இன்படி) |
| சம்பள அளவுத் திட்டம் | - 14230 - 120x10 - 130x10 - 16730.00 |
| வயதெல்லை | - 18 - 45 வரை |
| பால் | - ஆண் / பெண் |

**தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த. (சா/த) கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**02. பதவி - இலிகிதர் (01)**

| | |
|---|---|
| குறியீட்டு இல. | - 302 / 14 (13/2015 இன்படி) |
| சம்பள அளவுத் திட்டம் | - 13875 - 115x10-125x10-16275.00 |
| வயதெல்லை | - 18 - 45 வரை |
| பால் | - ஆண் / பெண் |

**தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ.க.பொ.த.(சா.த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப் பிரமாணங்களுக்கமைவாகக் கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி - 10.12.2015**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் இலிகிதர் (302/13) பதவிக்கான விண்ணப்பம் அல்லது இலிகிதர் (302/14) பதவிக்கான விண்ணப் பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சுவீதி, சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு 10.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்,
டச்சுவீதி, சாவகச்சேரி.24.11.2015

(J/2038A)(11.15)

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி கூட்டுறவுச் சேவையிலுள்ள
திரு.சி.பராராசசிங்கம் தலைவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021 493 1111
விநியோகம் : 021 493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விவகாரமாகிறது நவம்பர் 27 ஒரே பக்க விவகாரமாகுமோ?

நாளை, நவம்பர் மாதம் இருபத்தேழாம் திகதி, போரின் போது உயிர்நீத்த தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வருவதாக தகவல்கள் குவிந்து வருகின்றன.

நேற்று முன்தினம் (24 ஆம் திகதியன்றே) குழுக்களின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றில் மாவீரர்களுக்கு தமது அஞ்சலியைத் தெரிவித்தார் என்பது தமிழ்ப் பிரதேசங்களில் பிரதான பேசுபொருளாகி விட்டது.

2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர், தமிழர் பிரதேசங்களில் நவம்பர் 27 ஆம் திகதி உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதும் ஒரு வரலாறு என்றாகிவிட்டது.

இவற்றின் மத்தியில், நாளை 27 ஆம் நாளன்று வடக்கு, கிழக்கில் போரின்போது உயிர்நீத்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வைபவங்கள் நடைபெறும் என்று நம்புவதற்கு இடமுண்டு.

இதேவேளை, தனிப்பட்ட ரீதியில் இந்தியாவுக்குச் சென்றிருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா --

இலங்கையில் பிளவுபட்டுப் போயிருக்கும் சிங்கள தமிழ் மக்களிடையே நல்லிணக்கப் பாலத்தை அமைப்பதே நன்மை பயக்கும் என்று சுட்டிக்காட்டி இருப்பதும் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்டுவதற்குப் பொருத்தமான ஒன்றாகும்.

இதேவேளை, மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என்ற போர்வையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் உயிரூட்டுவதற்கு எவரும் எதிர்பார்த்தால், அவர்களை எதிர்க்கப்போவதாக இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான வாசுதேவ நாணயக்கார கங்கணம் கட்டி நிற்கின்றார்.

கொழும்பின் ஆட்சிப் பீடத்தில் ஏறிய சகல அரசுகளும், அரசியல் தலைவர்களும் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்குப் பின்னடித்தும், அரசியல் குத்துக்கரணங்கள் போட்டும் தோற்றுவித்த சரித்திரமே, போருக்கு மூலவேர் என்பதை, வசதியாக மறைத்து விடுகிறார்கள்.

பெரும்பான்மை இனத்தவர், சிறுபான்மை மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளைத் தட்டிப்பறித்தால் கேட்பதற்கு எவருமில்லை என்று, தாம் இயற்றிய அரசாட்சிச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்ததை இந்த நாட்டின் சரித்திரம் ஒரு காலமும் மறக்காது.

நல்லிணக்கம் என்பதை எழுத்திலும் வாய்ச் சொற்களிலும் பதித்தால் மட்டும் தமிழ் மக் களுக்குரிய உரிமைகளை வழங்குவது என்றாகாது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், இலங்கையில் புலிக்கொடி ஏறும் அபாயம் உண்டாகிவிட்டதாக அபாயக்குரல் எழுப்பி இருக்கிறார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தமை, இலங்கைக்கு எதிராகப் பிரிவினை வாதத்தை தூண்டிய அமைப்புக்களின் தடையை நீக்கியமை --

கடந்த (தமது) அரசினால் தடை செய்யப்பட்டிருந்த அமைப்புகள் மீதான தடையை இப்போதைய அரசு நீக்கியமை --

நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தல் என்று ஆக்ரோசம் அடைந்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி. இது நாட்டுக்குப் பெரும் பாதிப்பானது என்றும் கரித்துக் கொட்டியிருக்கிறார்.

அவரின் இந்த ஆக்ரோம், சிறிசேனா - ரணில் அரசை அசைத்து விழுத்துவதற்கான அம்பாகவும் ஆகலாம்.

ஒட்டு மொத்தத்தில், தமிழ் மக்களுக்குரிய, அவர்களிடம் இருந்து பிரித்து எடுக்க முடியாத, உரிமைகளை, அவர்களுக்கான உருத்துக்களை பலாத்காரமாக, "பெரும்பான்மை" என்ற பலத்தால் மீண்டும் மீண்டும், மேலும் மேலும் மண்ணுள் புதைக்கும் காட்சி விரியலாம் என்பதையே இது தொட்டுக் காட்டுகிறது.

புதிய அரசு என்ன செய்யப்போகிறது? மகிந்த தரப்போடு சேர்ந்து தானும் அதே தரப்புக்குச் சாதகமாக அமையும் வகையில் ஒரேபக்க (same side goal) விளையாட்டில் குதிக்கப் போகிறதா? இல்லையா....??? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



# கழிவுகளை அகற்றுவதில் கரிசனை வேண்டும்

வந்தியத்தேவர்

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பகுதியினரும் உள்ளூராட்சி மன்றங்களும் அதீத அக்கறையுடன் செயற்படுவதாக செய்திகள் வெளி வருகின்ற போதிலும், இந்த நடவடிக்கைகள் எந்த அளவுக்கு வெற்றியளித்துள்ளன என்பது கேள்விக்குரியதே. உள்ளூராட்சி மன்றங்கள் தமது பகுதிகளில் வாய்க் கால்கள் துப்புரவு செய்யப்படுவதாகவும், கழிவகற்றும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுவதாகவும் சொல்லிக் கொள்கின்றன. இது எந்த அள வுக்கு உண்மையானது என்பதை வீதிகள், கால்வாய்களைக் காணும்போதுதான் புரிகின்றது. நகர, புறநகர் வீதிகள் இன்னமும் கழிவுகள் நிறைந்துள்ள நிலையில் கால்வாய்களில் கழிவுநீர் ஓடவழியின்றித் தேங்கி நிற்பதையும் காண முடிகின்றது. பொது மக்கள் மட்டுமன்றி, வர்த்தக நிலையங்கள், தனியார் வைத்தியசாலைகள் என்பவையும் கூட நேரங்கெட்ட நேரத்தில் தம்வசம் உள்ள கழிவுப் பொருள்களை வாகனங்களில் எடுத்து வந்து ஆள் நடமாட்டமின்றிக் காணப்படும் வீதி ஓரங்களில் போட்டுவிட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்று விடுகிறார்கள். இவற்றைத் தெருநாய்கள் இழுத்து வந்து நடுவீதியில் போட்டுச் செல்கின்றன. யாரோ ஒருவர் எங்கிருந்தோ எடுத்துவந்து அடுத்த வீதியில் வீசுவது, உண்மையில் கழிவுகளை உரியமுறையில் அதற் கென வரும் வாகனங்களில் ஒப்படைப்பவர்களுக்கு சிரமத்தையும் சினத்தையும் ஏற்படுத்துகிறது. அண்மையில் பெய்த பெருமழையின் போது கழிவுப்பொருள்களும், கழிவுப் பொதிகளும் வெள்ள நீருடன் கலந்து வீதிகளை நிறைத்துக் காணப்பட்டன. மூன்று நான்கு அடிக்குமேல் மிகவும் அழுக்கு நீரில் மூழ்கிக் கிடந்த வீதிகளில் வேறு வழியின்றி மக்கள் நடமாட வேண்டியேற்பட்டதுடன், வீடுகளுக்குள் புகுந்த கழிவு நீரினால் அவர்கள் அவதிப்பட வேண்டியும் நேர்ந்தது. உள்ளூராட்சி சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில், பணியில் உள்ள உத்தியோகத்தர்கள்கூட தமது பொறுப்புக்கள் குறித்து பெரிய அளவில் சிந்திக்கவில்லை.

> **வெற்றுக் காணிகளைத் துப்புரவு செய்து எல்லையிட்டு பின்னர் உரியவர்களிடத்தில் அதற்கான செலவுகளை அறவிடுவ தெனத் தீர்மானித்திருந்த உள்ளூராட்சி மன்றங்கள் அதனை நடை முறைப் படுத்த நடவடிக்கைகள் எடுப்பதாக இல்லை.**

டெங்கு ஒழிப்பு நடவடிக்கை எனக் கூறி சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் கூடவே பொலி ஸார் என்று ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று பார்வையிடுவதுடன், நீர் தேங்கிக் கிடக்கும் குடுவைகளைக் கண்டால் அதற்கும் ஓர் எச்சரிக்கை யையோ வழக்கையோ பதிவு செய்து கொண்டு இந்தப் பகுதியில் இன்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளோம் என்ற திருப்தியுடன் திரும்பி விடுகிறார்கள். சுற்றாடலில் காணப்படும் வெற்றுக் காணிகள் அதற்குள் கிடக்கக் கூடிய குப்பை கூளங்கள் குறித்து அவர்கள் எந்தக் கவனமும் செலுத்துவது கிடையாது. வெற்றுக் காணிகளைத் துப்புரவு செய்து எல்லையிட்டு பின்னர் உரியவர்களிடத்தில் அதற்கான செலவுகளை அறவிடுவ தெனத் தீர்மானித்திருந்த உள்ளூராட்சி மன்றங்கள் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரியவில்லை. யாழ்.நகரப் பகுதியிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பற்றைகள் வளர்ந்து நீர்தேங்கி நுளம்புக் குடம்பிகள் உற்பத்தியாகக் காரணமான பல காரணிகள் உள்ளன.

டெங்கை ஒழிக்கவும் அதற்கென நிதி ஒதுக்கீடுகளை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நிதி ஒதுக்கீடுகளை உரியமுறையில் பயன்படுத்துவது அதிகாரிகள் தயாரிக்கும் திட்டங்களைப் பொறுத்தே அமையும். திட்ட வரைவுகள் சரியானதாக இருத்தல் வேண்டும். டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது எந்த அளவுக்கு பயனளித்திருக்கிறது என்பது குறித்த விழிப்புணர்வு அதிகாரிகளுக்குத் தேவை. வீணான பணவிரயங்கள் தவிர்க்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் நுளம்புகளை அழிப்பதற்கென மருந்துகள் எல்லா இடங்களிலும் தெளிக்கப்பட்டு வந்தன. இப்போது அந்த நடவடிக்கைகள் இல்லை. இந்தச் செயற்பாடுகள் மீளஇடம்பெற வேண்டும்.

குடியிருப்பாளர்களுக்கு கழிவுகளைக் கொட்டுவதற்கென தொட்டிகளை வழங்குவதுடன், எந்த ஒரு வீதியில் குப்பைகள் கழிவுகள் காணப்படினும் அந்த வீதியின் குடியிருப்பாளர்களிடம் அதற்கான தண்டப் பணம் அறவிடவும் உள்ளூராட்சி மன்றங்கள் முன்வர வேண்டும். இது ஒன்றும் பெரிய விடயமல்ல. மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி வரும் என்ற கவலை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையில்லை. மறை முகமாக இந்தத் தண்டப்பணத்தை வசூலிக்க வழிகள் உள்ளன. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வீதிகளில் உமிழ்நீர் சிந்தினாலோ அல்லது ஒரு சிறிய கடதாசித் துண்டைத் தான் வீசினாலும் சம்பந்தப்பட்டவர் மீது சட்ட நடவடிக்கை, தண்டப்பணம் அறவிடுவது என விதிமுறைகள் உள்ளன. இங்கே சுகாதாரச் சீர்கேட்டையும் தொற்று நோய்களையும் ஏற்படுத்தக் கூடிய பல தரப்பட்ட கழிவுகளையும் தன் வீட்டில் வைத்திருந்து அதற்கான வாகனங்களில் ஒப்படைக்க விரும்பாமல் அடுத்த வீதியில் அடுத்தவர்கள் வீட்டின் முன்பாக வீசிவிட்டு என் வீட்டுக்கழிவுகளை எங்கேயோ தள்ளி விட்டோம் என்ற திருப்தியுடன் செல்வதை அனுமதிக்க முடியுமா?

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் ஒருங்கிணைந்து முன்னெடுக்க வேண்டியை செயற்பாடு இது என்பதுடன், கழிவு நீர் வாய்க்கால்கள், வெற்றுக் காணிகள் விடயத்திலும் அவைகளது நடவடிக்கைகள் உறுதியானதாக அமையவேண்டும். வெறுமனே யாழ்ப்பாணத்தை சிங்கப்பூர் போல் மாற்றுவோம் என்று கூறிக் கொள்வதில் எவ்வித அர்த்தமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலேரியா நோயைத் தடுப்பதற்கான புதிய மரபணு நுளம்பு உருவாக்கம்

மலேரியா நோய் மக்களிடையே பரவாமல் தடுப்பதற்கான புதிய நடவடிக்கையொன்று அமெரிக்க கலிபோர்னியா பல்கலைக்கழக மரபணு தொழிநுட்பம் சார்ந்த விஞ்ஞானிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது, மலேரியா நோய்க்கு காரணமாகவுள்ள வைரஸ்ஸைக் கட்டுப்படுத்தக்கூடிய நுளம்பொன்றை மரபணு தொழிநுட்பம் மூலம் உருவாக்குவதாகும். 'கிரிஸ்ப' என பெயரிடப்பட்டிருக்கும் இந்த நுளம்பு உருவாக்கப்பட்டிருப்பது, இந்திய துணைக்கண்டத்தின் எனோபீலிஸ் ஸ்டெபன்ஸீ நுளம்பு இனத்தின் டி.என்.ஏ அணுவை மாற்றம் செய்ததன் மூலமாகும். இந்த நுளம்பை நுளம்புகளுடன் பரவச் செய்வதன் மூலம் மலேரியா நோயை ஓரளவு கட்டுப்படுத்தலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். உலக அளவில் வருடத்துக்கு ஐந்து இலட்சத்து 80 ஆயிரம் பேர் மலேரியா நோயால் இறப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

## இராட்சத சூரிய மின் உற்பத்தி நிலையம்



எரிபொருள் மற்றும் நீர் மின்சக்தியை பெறுவதற்கு முடியாத பகுதிகளில் இராட்சத சூரியப் படலம் அமைத்து மின்சக்தியை உற்பத்தி செய்யும் செயற்பாடு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இவற்றில் தென்னாபிரிக்காவில் உள்ள மொராகோ பகுதியும் தற்போது இணைந்துள்ளது. இதற்காக சகாரா பாலைவனத்தில் உலகிலேயே மிகவும் பெரிய சூரிய படலத் தொகுதி அமைக்கப்பட்டு வருவதுடன், இதன் மூலம் 10 லட்சம் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 20 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மின் சக்தியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மர நடுகை மாதம்

## மண்ணைக் காக்க மரத்தை நடுவோம்

*"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்"*

*தோமஸ் அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்)*

தமிழர் வாழும் பிரதேசமெல்லாம் கார்த்திகை மாதம் மரங்களை நடுவதற்குரிய புனித மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு அழிந்துபோன, அழிந்து கொண்டிருக்கின்ற மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை நடுதல் வேண்டும். நாம் எமது மூதாதையரின் முதுசொமான மரங்களிலே பயன்பெற்று வருகிறோமே தவிர, எமது அடுத்த சந்ததிக்காகப் புதிய மரங்களை நடுவதுமில்லை, நடுவதற்கு முயற்சி எடுப்பதுமில்லை. உதாரணமாக முன்னோர் நட்ட தென்னையில் இருந்து தான் நாம் இன்று தேங்காயைப் பெற்றுக்கொள்கிறோம். ஆனால் நாம் எமது எதிர்காலச் சந்ததியைப் பற்றிச் சிந்திக்காது குறுகிய காலத்தில் பயன்பெறக்கூடிய தென்னை வகைகளை நட்டு வருவது எமது சுயநலத்தையே எடுத்துக் காட்டுகின்றது. கடந்த காலங்களில் எமது இனத்தை மட்டும் இழக்கவில்லை. அரிய வகை மரங்களையும் இழந்து விட்டோம். எனவே இனிவரும் காலங்களில் இன்றைய தலைமுறையினர் தமிழினத்தையும் பெருக்க வேண்டும். மரத்தையும் பெருக்க வேண்டிய தார்மீகக் கடமை எல்லோருக்கும் உள்ளது. நாம் இழந்ததைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம். இனி இழக்கப் போகின்றதைத் தடுத்து நிறுத்துவதற் குரிய காத்திரமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. ஏனெனில் ஒரு சமூகத்தில் சுற்றுப் புறச் சூழல் என்பது மிகமுக்கியமானதும் அடிப்படையானதும் ஆகும். எனவே இயற்கையான சூழலை உருவாக்குவதில் நாம் அனைவரும் கைகோர்க்க வேண்டிய காலம் இதுவாகும். அன்றைய காலத்தில் வீட்டு முற்றத்தில் மல்லிகைக் கொடியோ கொன்றல் மரமோ அல்லது நறுமணங்கள் வீசக்கூடிய பூக்களைக்கொண்ட மரங்களோ காணப்படும். அவை வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் நல்ல சுத்தமுள்ள வாசனையாக மாற்றுகின்றது. ஆனால் இன்று பொருளாதார வசதி கொண்டிருப்பவர்களும், அல்லற்பட்டுக் கொண்டிருப்பவர்களும் கூட வாசனைத் திரவியங்களை வீட்டுக்கும் வீட்டுக்கு வெளியேயும் பாவித்து பணத்தை வீணடிப்பதுடன் நோய்களுக்கும் உள்ளாகின்றனர். இதன் மூலம் ஆயுட் காலத்தைக் குறைத்துக் கொள்கின்றனர். இயற்கையில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நிறைய விடயங்கள் உண்டு. உதாரணமாக அப்பிள் மரத்தின் கீழ் உறங்கிக் கொண்டிருந்த ஐசாக் நியூட்டன், அப்பிள் பழம் கீழே விழுந்ததை அவதானித்து சிந்தித்து புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். இவ்வாறு இயற்கையாக உள்ள மரங்கள் விஞ்ஞானத்தை வளர்த்துள்ளன என்பதில் மிகையேதுமில்லை. புனிதமான இந்த மாதத்தில் புதியவகை மரங்களை நடுவோம். நன்மை பெறுவோம். அதாவது முல்லைக்கு பாரி மன்னன் தேரைக் கொடுத்தான். நாம் ஒரு சதுர அடி நிலத்தை ஒதுக்கி மண்ணையும் மனிதர்களையும காப்போம். மரங்களை நடுவது அதனை வளர்த்து எடுப்பது என்பது சாதாரண விடயமல்ல. அதனையும் குழந்தைகளைப் பராமரிப்பதுபோல ஆரம்பத்தில் அதிக அக்கறை காட்டிப் பராமரிக்க வேண்டும். இன்றைய எமது இளைய தலை முறையினரை மரநடுகையில் ஊக்கப்படுத்தி எமது பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்வோம். மரமின்றேல் நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ முடியாது.


**ப.தர்மகுமாரன்,** ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி




# ஐ.எஸ்.க்கு எதிராக ஆஸி. களமிறங்காது

## அந்த நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

மெல்பேர்ன், நவ.26
சிரியா மற்றும் ஈராக்கில் நிலை கொண்டுள்ள ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போராட இராணுவத் துருப்புக்களை அனுப்புவதற்கான திட்டம் ஏதும் ஆஸ்திரேலியாவிடம் இல்லை என்று அந்த நாட்டுப் பிரதமர் மெல்கம் டர்ன்பல் தெரிவித் துள்ளார்.



பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிரான போர் தொடர்பிலான தனது நிலைப்பாட்டை வெளியிடும் வகையில் அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட தேசிய பாதுகாப்பு அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். அமைப்பானது மிகவும் பலவீனம் உடையதாகக் காணப்படுகிறது. அதனால் அந்த அமைப்புக்கு எதிராகப் போராடத் தமது துருப்புக்களை ஈடுபடுத்த முடியாது என அவர் குறிப்பிட் டுள்ளார்.

ஐ.எஸ். தற்கால நவீன இணைய முறைகளைப் பயன்படுத்தி வருகின்றது. அவர்கள் துப்பாக்கியை விட நவீன ஸ்மார்ட்போன்களை உபயோகித்து வருகின்றனர். அது மட்டுமின்றி போராளிகளை விட பல டுவிட்டர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் கூறியுள்ளார். (ற)

# ஐ.எஸ். அமைப்பை அ

# பிரான்ஸ்–அமெ. கைகே

வொஷிங்டன், நவ.26
ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போராட அமெரிக்காவும், பிரான்ஸும் ஒன்றிணைந்து செயற்படும் என இரு நாட்டுத் தலைவர்களும் அறிவித்துள்ளனர்.

பரிஸ் தாக்குதலை அடுத்து பயங்கரவாதிகளுக்கு எதிராக ஒருங்கிணைந்த தாக்குதலை நடத்துவது குறித்து ஆலோசனை நடத்தும் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை, பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்செஸ்ஹாலண்டே வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தபோதே மேற் கண்டவாறு குறிப்பிட்டனர்.



பிரான்ஸ் தலைநகர் பரிஸில் ஐ.எஸ் தீவிரவாதிகள் கடந்த 13ஆம் திகதி நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் 129 பேர் கொல்லப்பட்டனர்.



அப்பா அழாதே!
ஐரோப்பாவின் வீதிகளிலே பயண இலக்கற்றுச் சுற்றித் திரியும் ஒரு சிரிய அகதி மன வேதனையில் கதறி அழும் தந்தையைத் தேற்றும் குழந்தை. மனதை உருக்கும் காட்சி.

# போர் விமான விபத்தில் பெண் விமானி சாவு

## பாகிஸ்தானில் சம்பவம்

இஸ்லாமாபாத், நவ.26
பாகிஸ்தானின் பயிற்சி ஜெட் போர் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த பெண் பாகிஸ் தான் போர் விமானி உயிரிழந்துள்ளார். இவ்வாறான விபத்துச் சம்பவத்தில் பெண் விமானி ஒருவர் உயிரிழந்தமை பாகிஸ்தானில் இதுவே முதல் முறையாகும்.



பாகிஸ்தான் விமானப் படைக்குச் சொந்தமான குறித்த ஜெட் விமானமானது, வழமையான செயல்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது குறித்த பயிற்சி விமானத்தில் இரு விமானிகள் பய ணித்துள்ளனர்.

விமானத்தை மரியம் முக்தார் என்ற பெண் விமானி இயக்கியுள்ளார். இவருடன் சாகிப் அபாஸி என்ற அதிகாரியும் இருந்துள்ளார். விமானத்தில் தொழிநுட்ப பிரச்சினை ஏற்பட்டு விழப்போவது தெரிந்தவுடன், பொதுமக்கள் இல்லாத இடமாகப் பார்த்து விமானத்தின் அவசரகால வாசல் மூலம் இருவரும் வெளியேறியுள்ளனர்.

ஆனால், இந்த விபத்தில் பெண் விமானி மரியம் முக்தார் உயிரிழந்தார். சாகிப் அபாஸி படுகாயத்துடன் மீட்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் இராணுவத்தில் மொத்தமாக 19 பெண் விமானிகளே உள்ளனர். (ற)

# சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் தன்சானிய ஜனாதிபதியால் ரத்து

நியூயோர்க், நவ.26
தன்சானியாவில் சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தை தன்சானியாவில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ஜோன் மகுபுலி ரத்துச் செய்துள்ளார்.

தன்சானியா 1961ஆம் ஆண்டு டிசெம்பர் 9ஆம் திகதி பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. அதன்படி இந்த வருடம் 54ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ளது. அதற் கேற்ப இம்முறை சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்குப் பதிலாக சுத்தப்படுத்தல் நடவடிக்கையொன்றை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில், பலர் கொலரா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்ற நிலையில் பெரும் செலவில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதை இழிவாகக் கருதுவதாக சுட்டிக்காட்டிய அவர், சுதந்திர தினத்தன்று அனைவரும் சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

தன்சானியாவில் கடந்த மூன்று மாதங்களில் கொலரா நோயால் பாதிக்கப்பட்டு 60 பேர் வரை உயிரிழந்துள்ளனர். (ற)

# பெரு–பிரேஸில் எல்லையில் சக்தி வாய்ந்த நில நடுக்கம்

லிமா, நவ.26
பெரு மற்றும் பிரேஸில் எல்லையில் நேற்று முன்தினம் 7.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெரு தலைநகர் லிமாவில் இருந்து 681 கிலோமீற்றர் தொலைவில் பெரு–பிரேஸில் எல்லைப் பகுதியில் இந்த நிலநடுக்கம் ஆரம்பத்தில் ரிக்டர் அளவுகோலில் 7.1ஆக பதிவாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து 7.5 ரிக்டர் அளவில் பூமிக்குக் கீழே 600 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

'பெரு– பிரேஸில் நாடுகளின் எல்லைப் பகுதியில் இந்த நிலநடுக்கம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அருகில் உள்ள பொலிவியா நாட்டிலும் பூகம்ப அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. பூகம்பத்தின் மையப் பகுதியானது, பெரு நாட்டின் இபே ரியா நகரிலிருந்து 175 கி... தொலைவில் அமேசன் வ... யில் இருந்துள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட... கள் குறித்த தகவல்கள் ... தெரியவில்லை. நில அதி... வேறு நகரங்களில் கட்டட... கின. இது சக்திவாய்ந்த பூ... என்ற போதிலும் அதிக ஆ... பட்டிருப்பதால், சுனாமி வ... லை எனவும் அமெரிக்க... ஆய்வு மையம் தெரிவித்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிக்க
# ...கோர்ப்பு



இதனைத் தொடர்ந்து சிரியா மற்றும் ஈராக் நாடுகளில் ஐ.எஸ் ஆதிக்கம் அதிகமுள்ள இடங்களில் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி ஹாலண்டே தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஒபாமா, பிரான்ஸின் நடவடிக்கைக்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும், தற்போது நாம் அனைவரும் பிரெஞ்சு நாட்டவர்களே. தீவிரவாதிகளுக்கும் அவர்களை அனுப்பியவர்களுக்கும் நீதியைப் புகட்ட எமது நாடுகளைப் பாதுகாக்க அமெரிக்காவும் பிரான்ஸும் ஒற்றுமையாகச் செயல்படும். அமெரிக்கர்கள் அச்சமடைய மாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார். (ற)

...தலில்
...னர்.

# சீனாவும் தாய்லாந்தும் கூட்டு விமானப் பயிற்சி

பீஜிங், நவ.26

சீனா மற்றும் தாய்லாந்து விமானப் படையினர் இணைந்து கூட்டு விமானப்படைப் பயிற்சியொன்றை நேற்றுமுன்தினம் நடத்தியுள்ளனர்.

தாய்லாந்தின் நகொம் ராட்சசிமாவில் உள்ள கொரட் ரோயல் விமானப்படைத் தளத்தில் இடம்பெற்ற இந்த கூட்டுப் பயிற்சியில் இரு நாடுகளினதும் ஐந்து போர் விமானங்கள் ஈடுபட்டன. அவை சுமார் 3 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து சாகசங்களை நிகழ்த்தின.

இந்தப் பயிற்சியானது சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் அதிகரித்துக்கொள்ளும் முகமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதில் இரு நாட்டின் விமானப் படைகளின் உயர் அதிகாரிகளும், முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.



அவர்கள் விமானங்களின் பயிற்சியையும் கண்டு களித்தனர்.

எதிர்வரும் 26ஆம் மற்றும் 27ஆம் திகதிகளிலும் இவ்விரண்டு நாடுகளின் விமானப் படைகள் இணைந்து இரண்டு நாள் பயிற்சியொன்றை நடத்தவுள்ளன. (ற)



## மெக்சிக்கோவில் கார்- பஸ் விபத்து 24 பேர் சாவு

மெக்சிக்கோவின் பூப்லா மாநிலத்தில் பஸ்ஸொன்று காரொன்றின் மீது மோதியதில் ஏற் பட்ட பெரும் விபத்தில் 24 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தகவலை அந் நாட்டு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

போஜா ரீக் நகரில் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ், காரொன்றின் மீது நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளானது. இந்த விபத்தில் 24 பேர் உயிரிழந்தனர். மேலும் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந் துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலான விசாரணைகள் தற்பொழுது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



...வேதனையின் உச்சத்தில் தன் குழந்தையின் முன்னே அழும் காட்சி!.

# ஐ.நா. அமைதிப் படையின் தொடரணி மீது தாக்குதல்

### மாலியில் ஒருவர் சாவு




திம்புக்ட்டு, நவ.26

மாலி நாட்டின் வடபகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையினரின் வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐ.நா.வின் பணியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்திற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்களால், மேற்கு ஆபிரிக்காவில் அமைதியை ஏற்படுத்தும் எமது முயற்சியிலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என பான் கீ-மூன் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாலியில் உள்ள கவுண்டம் பௌதியில் இருந்து திம்புக்ட்டு நகரை நோக்கி நேற்று வாகனங்களில் ஐ.நா. அமைதிப் படையினர் சென்று கொண்டிருந்தனர். அப்போது, அந்த வாகனத் தொடர் அணியைவழிமறித்த அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். அதில் ஐ.நா.வின் பணியாளர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்துள்ளார்.

மாலியில் தீவிரவாதச் செயல்களை ஒழிக்கவும், அமைதியை நிலைநாட்டவும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் அதிகமான அமைதிப் படையினர் மாலியில் முகாமிட்டுள்ளனர். (ற)

# ...யில்
# ...க்கம்

...து 175 கிலோமீற்றர் ... அமேசன் வடிநிலப் பகுதி ...ள்ளது.

...ால் ஏற்பட்டுள்ள பாதிப்பு ... தகவல்கள் இன்னமும் ...லை. நில அதிர்வால் பல ...களில் கட்டடங்கள் குலுங் ...திவாய்ந்த பூகம்பம்தான் ...லும் அதிக ஆழத்தில் ஏற் ...ல், சுனாமி வர வாய்ப்பில் ... அமெரிக்க புவியியல் ...ம் தெரிவித்துள்ளது. (ற)

# மெக்சிக்கோவில் நிலநடுக்கம்

மெக்சிக்கோ சிற்றி, நவ.26

மெக்சிக்கோவில் குயரெரோ மாகாணத்தில் 5.5 ரிக்டர் அளவில் கடந்த திங்கட்கிழமை நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் அறிவித் துள்ளது. நிலநடுக்கத்தை அடுத்து கட்டடங்களில் ஏற்பட்ட அதிர்வைத் தொடர்ந்து அப்பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் மற்றும் பொருட் சேதங்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த நிலநடுக்கம் தலைநகர் மெக்சிக்கோ சிட்டி, அகாபுல்கோ உள்ளிட்ட நகரங்களிலும் உணரப்பட்டது. அங்கும் வீடுகள் மற்றும் கட்டடங்கள் அதிர்ந்ததை அடுத்து, பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

சுற்றுலாத் தலமாக விளங்கும் அகாபுல்கோ நகரில் நிலநடுக்கம் காரணமாக அங்கு தங்கியிருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றப்பட்டனர். மெக்சிக்கோ சிற்றியிலும் வீடுகளில் தங்கியிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டனர்.


பழைமை வாய்ந்த ஏரிப் படுகையில் அமைந்துள்ள மெக்சிக்கோ சிற்றி நகரில், நிலநடுக்கத்தின் போது வீடுகள் மற்றும் கட்டடங்கள் மண்ணுக்குள் புதையவும், இடியவும் வாய்ப்பு உள்ளது. அதையடுத்தே உயிர்ச் சேதத்தைத் தடுக்க அவர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கினம் விலக்கும் விநாயகர் விரதம் இன்று ஆரம்பம்

தெய்வத்தமிழ்ச் சுடர்
இராசையா ஸ்ரீதரன்




உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளும் ஓங்காரத்தின் உட்பொருளுமான விநாயகப் பெருமானுடைய விரதம் இன்று முதல் ஆரம்பமாகின்றது. அடியார்களின் விக்கினங்களையெல்லாம் விலக்கித் திருவருள் சுரக்கின்ற தெய்வம் ஸ்ரீ விநாயகப் பெருமானேயாவார்.

அவருடைய தோற்றமே தெய்வீகமானது. புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக்கும் ஒவ்வொருவரும் இந்த விநாயகப் பெருமானுடைய திருவருளைப் பெற்றுய்வதற்கு வழிகாட்டு கின்ற புண்ணிய விரதம் இந்தப் பெருங்கதை விரதமே. விநாயகரின் பெரு மையை எடுத்தியம்புகின்ற பெருங்கதைப் பூசை இன்று முதல் ஆரம்பமாகி இருபத்தொரு நாள்களுக்குத் தொடர்ந்து இடம்பெற இருக்கின்றது.

இந்த அரிய பெரிய விநாயகருக்குரிய பெருங்கதைப் பூசை, விநாயகர் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் புனிதத் தலங்களில் மிக விமரிசையாக இன்று முதல் இடம்பெறவிருக்கின்றது.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ் சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தனிப் பெரும்தெய்வமான விநாயகப் பெருமானுடைய திவ்ய பெருங்கதை, அவருடைய வரலாற்றை விளக்கி நிற்பதோடு, விநாயகரின் பெருமையையும் அவர் அருள் பெற்றவர்களின் தன்னிகரற்ற புண்ணியப் பேற்றையும் உரைத்து, அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட நிகழ்வு பற்றிய விவரங்களையும் தெளிவாக எடுத்தியம்பி நிற்கின்றது.

**விக்கினங்களையெல்லாம் நீக்கியருள்கின்ற அருட் தெய்வமான ஸ்ரீ விநாயகப் பெருமானுடைய பெருங்கதையை சைவசமயிகள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். இன்று தொடக்கம் இந்தப் பெருங்கதையானது விநாயகர் கோயில்களில் வெகு விமரிசையாகவும் பக்தி பூர்வமாகவும் அடியார்களால் படிக்கப்படும்.**

இந்தப் பெருங்கதையைப் படிப்பவர்களும், அருகிருந்து கேட்பவர்களும் இந்த உலகில் சகல சௌபாக்கியங்களும் கைவரப்பெற்று, எல்லா நன்மைகளையும் அடைந்து, செல்வச் செழிப்போடும், சீரோடும், சிறப்போடும் நல்லபடி வாழ்ந்து இறையருளை நுகர்வர் என்று சொல்லப்படுகின்றது.

இத்தகைய சிறப்புமிகு திவ்ய அருள்தரும் பெருங்கதைப் படிப்பு எமது சைவப் பாரம்பரியத்தையும் கோட்பாடுகளையும் விளக்கும் வகையில் அமைந்து நற்பயன் தருவதோடு, விநாயகப் பெருமானுடைய அருள் சுரக்கும் , ஆனந்தமளிக்கும் அருள் விரதமாகவும் காணப்படுகின்றது. இதை அனுஷ்டிக்க விரும்புவோர் காலையில் எழுந்து கணபதியைக் கைதொழுது அவர் நினைப்புடனே புனித புண்ணிய நீராடிச் சந்தியாவந்தனம் முடித்துத் தீட்சை வைத்து அருகிலிருக்கும் பிள்ளையார் கோயிலுக்குப்போய், ஆலயக் குருக்களிடம் தர்ப்பை வாங்கி சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்.

அதைத் தொடர்ந்து கோயிலில் நிகழ்கின்ற பூசை வழிபாடுகளில் பங்குபற்றி சுவாமி தரிசனம் செய்து பெருங்கதைப் படிப்பில் பக்தி விநயத்தோடு கலந்து கொள்ளவேண்டும்.

இதைத் தொடர்ந்து இருபத்தொரு நாளும் விரதம் காக்க வேண்டும். முடியுமாயின் முழுநாளும் உபவாசமிருந்து தினமும் மாலையில் இறைவழிபாடு இயற்றிய பின் பால், பழம் இவற்றோடு சிறிதளவு உண வும் உட்கொள்ளலாம். இது முடியாதவர்கள் ஒவ்வொரு நாளும் காலையில் சுவாமி தரிசனம் செய்து விநாயகர் அகவலைப் பாராயணம் செய்து மதியம் மட்டும் உணவெடுத்து விரதம் நோற்கலாம். முழுப்பயனும் பெறுவதாயின் உணவேதுமின்றி நீராகாரம் மட்டும் எடுத்துக் கண்டிப்புடன் கைதொழுதல் வேண்டும். இந்த விரதத்தை முறையாக விதிப்படி நோற்றால் பரிபூரண கிருபா கடாட்சம் கிட்டும். உலகில் சுகமாக வாழலாம்.

> சிறப்புமிகு திவ்ய அருள்தரும் பெருங்கதைப் படிப்பு எமது சைவப் பாரம்பரியத்தையும், கோட்பாடுகளையும் விளக்கும் வகையில் அமைந்து நற்பயன் தருவதோடு, விநாயகப் பெருமானுடைய அருள் சுரக்கும், ஆனந்தமளிக்கும் அருள் விரதமாகவும் காணப்படுகின்றது.

அது ஒருபுறமிருக்க விநாயகரின் பெருமையைப் பார்ப்போம்.

தனக்கு மேல் வேறொரு தலைவர் இல்லாதபடியால் இவருக்கு விநாயகர் என்று பெயர். வி" என்றால் மேலான, நாயகர் என்றால் தலைவர். விக்கினங்களையெல்லாம் களைபவரானபடியால், விக்கினேஸ்வரர் எனப்பட்டார். மேலும், கணங்களுக்கெல்லாம் ஈசனாகையால் கணேசன் என்றும், கணங்கள் யாவற்றுக்கும் பதியாக விளங்குகின்றமையால் கணபதி என்றும், யானை முகத்தைக் கொண்டவராதலால் ஆனைமுகன், கரிமுகன், கஜமுகன் என்றும் அழைக்கப்படுகின்ற இவர் முதல் வணக்கத்துக்குரியவர். நாங்கள் எந்தக் காரியம் தொடங்கினாலும் முதலில் விநாயகப் பெருமானை வணங்கியே ஆரம்பிக்கின்றோம்.

ஏனெனில் காரியங்களைச் சித்திக்கச் செய்பவர் விநாயகரே. அதனால்தான் அவருக்கு சித்திவிநாயகர் என்று பெயர் விளங்குகின்றது. நாங்கள் என்ன காரியத்தை எப்போது தொடங்கினாலும் முதல் வணக்கம் விநாயகப் பெருமானுக்கேயாகும்.

விநாயகர் வணக்கம் மிகச் சுலபமானது. பசுவின் சாணத்தில் ஓர் உருண்டை பிடித்து அதிலே அறுகம்புல்லைச் செருகினால் வந்துவிடுவார் பிள்ளையார். எளிதாக அவரை உருவாக்கி விடலாம். மஞ்சள் உருண்டை யிலும் வைக்கலாம். அந்த வகையில் விநாயகரை நாம் வணங்கி ஆரம்பிக்கின்ற காரியங்கள் ஒரு போதும் பிழைக்காது.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை"

என்ற பாடலின் மூலம் கணபதியின் பெருமை விதந்துரைக்கப்படுகின்றது.

இன்று ஆரம்பமாகின்ற பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமன்றி, ஈழத்தின் பல்வேறு பாகங்களிலிருக்கும் அனைத்துப் பிள்ளையார் கோயில்களிலும் மிகவும் சிறப்பான முறையிலே விசேட அபிசேக ஆராதனைகளுடனும் பூசை வழிபாடுகளுடனும் நடத்தப்படுகின்ற பக்தி பூர்வமான ஒரு நிகழ்வாகும்.

மண்ணுலகில் பிறவி இல்லாது போகவும் நினைத்த காரியம் கைகூடவும் ஆனைமுகத்தையுடைய தும்பிக்கையான் மேல் நம்பிக்கையுடனே ஒருமனதாக வழிபாடு இயற்றுதல் வேண்டும்.

இந்த விநாயகப் பெருமானுடைய திவ்ய பெருங்கருணைக்குப் பாத்திரமாக வேண்டுமாயின் இந்தப் பெருங்கதை விரதம் நோற்று இருபத்தொரு நாளும் நம்பிக்கையோடு பிள்ளையாரை வணங்குதல் வேண்டும். திருவாக்கும் பீடும் பெருக்கும் இந்தக் கதையைப் படித்து சைவசமயிகள் ஒவ்வொருவரும் புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்றுய்வார்களாக.

உதயனின் நேற்றைய புதன்பொய்கை மலரின் f பக்கத்தில் பிரசுரமான "உள்ளத்தில் வாழ்பவர்" என்ற ஆக்கத்தை எழுதியவர் சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ். தர்மலிங்கம் ஆவார். ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி விளக்கம்

# சந்தைகளில் கழிவு முறை

இரண்டு வருடங்களாகியும் முயற்சி இல்லை' எனும் தலைப்பில் உதயனில் கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி மூன்றாம் பக்கத்தில் வெளியாகியுள்ள செய்தி தொடர்பாகச் சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் நடைமுறையில் இல்லாத கழிவு முறையை வடபகுதிச் சந்தைகளில் மட்டும் கடைப்பிடிப்பது முறையானதா?

மேலும் நீண்ட காலமாக நடைமுறையில் இருக்கும் இந்தப் பழக்கத்தை உடனடியாக நிறுத்துவது எப்படி? என்பது தொடர்பாக விவசாய அமைச்சோ அமைச்சரோ எந்த ஆலோசனையையும் முன்வைக்காமையால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போய் விட்டது என்று வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தெரிவித்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதில் சில கேள்விகள் எழுகின்றன.

குறித்த அமைச்சிடமிருந்து தேவையான ஆலோசனைகள் கோரப்பட்டனவா?

அல்லது பிரதேச சபையால் பொருத்தமான பொறிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டு ஆலோசனை கோரப்பட்டதா? என்பதும் தெரியவில்லை.

கழிவு முறையை நடைமுறைப்படுத்தல் தொடர்பாகச் சில வழிமுறைகளை ஏற்படுத்தியிருக்கலாம்.

1. பத்துக்கு ஒன்று என்ற கழிவு முறையை பத்துக்கு அரை என்பதில் தொடங்கிப் படிப்படியாக நீக்கி இருக்கலாம்.

2. குறித்த சில பொருள்களுக்கு மட்டுப்படுத்தி(உதாரணம்:- மரவள்ளிக்கிழங்கு) படிப்படியாக நீக்கியிருக்கலாம்.

மேலும் வடபகுதிச் சந்தைகளுக்கு வெளிமாகாணங்களிலிருந்து கொண்டு வரப்படும் உற்பத்திகளுக்கு இந்தக் கழிவு முறை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனக் கூறப்படுகின்றது. அது உண்மையெனில் ஒரே சந்தையில் இருவேறு நடைமுறைகள் பின்பற்றப்படுவது ஏன் என்பதும் தெளிவானதாக இல்லை. மேலும், இதில் ஆறுதல் தரும் ஒரு விடயம் கழிவு கொடுக்கப்படும் நிறையைக் கழித்த மிகுதி நிறைக்கே ஒப்பந்தகாரர்களால் வரி அறவிடப்படுகிறது என்பதாகும். விவசாயிகள் நலன்களையும் பாதுகாக்க வேண்டியது உள்ளூராட்சி சபைகளது கடமையும் பொறுப்புமாகும். எனவே, கழிவு முறையை நீக்குவதற்குப் பொருத்தமான பொறிமுறையை உள்ளூராட்சிச் சபைகளும் மாகாண விவசாய அமைச்சும் இணைந்து உருவாக்கி விரைவில் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

*அருளானந்தம், விவசாயி*

# வெள்ளம் வரும் முன்னர் அணை கட்டுவோம்

கால நிலையில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாகத் தொடர்ந்து கனமழை பெய்து வருகின்றது. இதனால் இந்தியாவின் தமிழ்நாடு உட்பட இலங்கையின் வட பகுதியும் பெரும் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

வடபகுதியில் மலைகள், ஆறுகள், நதிகள் என்பவை இல்லாததன் காரணமாக ஆண்டுதோறும் அடிக்கடி வெள்ளப் பாதிப்பு ஏற்படுவதில்லை. ஆனால், வங்கக் கடலில் தாழமுக்கம் ஏற்படும்போது தொடர்ந்து பெரும் மழை பெய்கின்றவேளைகளில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டு விடுகின்றது. இந்த ஆண்டும் அவ்வாறே நடந் துள்ளது. சில பகுதிகளிலுள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், பல குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறிப் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளன. இவர்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும், நிறுவனங்களுக்கும் உள்ளது.




வெள்ளப் பாதிப்பு ஏற்படுவதற்கு வீதிகள் புனரமைக்கப்பட்டபோது, அவை அதிகளவில் உயர்த்தப்பட்டமையும் பிரதான காரணங்களில் ஒன்றாகும். வீதிகள் உயர்த்தப்பட்டதால் வெள்ளம் வழிந்தோட முடியாது வளவுகளில் தேங்கி நிற்கின்றது. இதைவிட வெள்ளம் வழிந்தோடிச் செல்கின்ற பாதைகளும் சீர்செய்யப்படாத நிலையில் காணப்படுவதால், வெள்ளம் தடைப்பட்டுத் தேங்கி நிற்பதையும் காண முடிகின்றது. வெள்ள நீர் பெருமளவில் ஓடிச் செல்லும் பிரதான வீதிகளில் அமைந்துள்ள மதகுகள் கூட பராமரிப்பின்றிக் காணப்பட்டதால் வெள்ளம் ஓடிச் செல்ல முடியாது தேங்கி நிற்பதையும் காண முடிகின்றது.

ஆகவே வெள்ளம் வரும் முன்னர் அணைகட்டவேண்டும் என்பதற்கு அமைவாக மழைக் காலத்துக்கு முன்பாகவே மழை வெள்ளம் வழிந்தோடக் கூடிய வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் வெள்ளப் பாதிப்பிலிருந்து ஓரளவாவது தப்பித்துக்கொள்ள முடியும்.

*மா.வசீகரன், ஏழாலை.*

# சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியை புனரமைப்பது எப்போது?

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட, ஆனைக்கோட்டை உப அலுவலக எல்லைக்குள் அமைந்திருக்கும் சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதி போர்க்கால சூழலுக்குப்பின் குறைந்தது 25 வருடங்களுக்கு மேலாக எந்தவித திருத்தமோ, மீள்புனரமைப்போ செய்யப்படாமல் இருக்கின்றது. தற்போது மழைக் காலம் ஆரம்பித்துள்ளது. இந்த வீதி உயர்ந்தும்,பதிந்தும் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. மழை நீர் தேங்கிவழிந்தோட முடியாமல் உள்ளது. நீர்வழிந்தோடும் வாய்க்கால்கள் தூர்ந்து போயுள்ளன. இந்த வீதி பொது மக்களின் பாவனைக்கு ஏற்றதாக இல்லை. வலி.தென்மேற்கில் எல்லா வீதிகளும் செப்பனிடப்படும் நிலையில் இந்த வீதி மட்டும் புறக்கணிக்கப் படுவது பற்றி பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள். கடந்த காலங்களில் பிரதேச சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்கள்கூட இந்த வீதிபற்றி எந்தவித அக்கறையும் மேற்கொள்ளாதது மிகவும் வருத்தத்துக் குரியது. இந்த மழை காலத்திலாவது உரிய அதிகாரிகள் குறித்த வீதியை நேரடியாகப் பார்வையிட்டு அடுத்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத் திலாவது நிதி ஒதுக்கீடு செய்து இந்த வீதியைச் செப்பனிட ஆவன செய்ய வேண்டும் என மக்கள் சார்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*க.கனகசபை, சண்டிலிப்பாய்*

## கேலிச் சித்திரம்




நன்றி: மவபிம

# மயக்கம் தரும் பட்ஜெட்

மாற்றம் என்ற ஒன்றைப் பிரதானமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட தற்போதைய அரசின் போக்கு, மக்கள் மத்தியில் சந்தேகத்தையே ஏற்படுத்தி வருகின்றது.

ஜனாதிபதி மைத்திரி தலைமையில் சில செயற்பாடுகள், பிரதமர் ரணில் தலைமையில் சில செயற்பாடுகள், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் சில செயற்பாடுகள், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் மறைமுகச் செயற்பாடுகள், மற்றும் ராஜித, சம்பிக்கவின் சில செயற்பாடுகள் என ஒரு குழப்பமான போக்கு அரசுக்குள் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

புதிய அரசு இதுவரையில் மக்களுக்கு என்ன செய்தது? என்ன செய்யத் தவறியது? என்ற கேள்விகள் எழுந்த வண்ணமுள்ளன. யார் ஆளும் கட்சி? யார் எதிர்க்கட்சி என்ற குழப்பமும் மக்கள் மத்தியில் இருக்கிறது.

ஆட்சிக்கு வந்த கையோடு மிகப் பெரும் நெருக்கடியாக அவதானிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின், போர்க்குற்ற தீர்மானத்தைக் கூட, இராஜதந்திர ரீதியல் இலகுவாக அணுகமுடிந்த இந்த அரசினால், தேசிய ஒருமைப்பாடு, இன நல்லிணக்கம் போன்ற விடயங்களில் வெற்றி ஈட்ட முடியாது போயுள்ளது என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான இந்தத் தேசிய அரசில் பெரிய முரண்பாடுகளும் நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன. முரண்பாடான கருத்துக்கள் அமைச்சர்களினால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அமைச்சரவைக்கான கூட்டுப் பொறுப்பு இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது.

அமைச்சர் ஒருவர் பதவி விலகியுள்ளார். மற்றுமொரு அமைச்சரை பதவி விலகக் கோருகின்றனர். குறிப்பாக இந்த அரசைக் கலைக்க வேண்டுமென மகிந்த தரப்பு முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றது.

குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார முன்னெடுப்புக்களைப் பலரும் பார்த்திருந்தனர். இந்த நிலையில் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தேசிய அரசொன்றின் ஊடாக வரவு-செலவுத்திட்டம் இலங்கையை மீள நிலை நிறுத்துதல் என்ற கருப்பொருளில் சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

இதனைச்சமர்ப்பித்த நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, கடந்த மகிந்த அரசினால் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பெரிய நெருக்கடி நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெளியுறவுக் கொள்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் கடந்த அரசு பிழையான அணுகுமுறைகளைப் பின்பற்றியிருந்ததாகவும் குறிப்பிட்ட அவர், அரச முயற்சியாண்மைகளுக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச ரீதியாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு கூடுதல் சிரத்தை எடுத்துக்கொள்ளும் எனவும், வெளிநாடுகளில் பணத்தை வைப்புச்செய்துள்ளோர் அந்தப் பணத்தை நாட்டுக்குள் கொண்டுவரவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளதாகவும், புதிதாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய வெளிநாட்டு முதலீடுகளுக்கு 50 சதவீத வரிச்சலுகை வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையை வியாபார சொர்க்கபுரியாக மாற்றுவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன். கொழும்பு நகரில் சர்வதேச நிதி கேந்திர நிலையம் உருவாக்கப்படும் என்றும் அத்துடன் வவுனியாப் பகுதியில் பொருளாதார வலையம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர், கண்டி, மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் 3 புதிய புற்றுநோய் மருத்துவமனைகளைக் கட்டுவதற்கு 3,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வீட்டுப் பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டரின் விலை 150 ரூபாவும், மண்ணெண்ணெய் லீற்றருக்கு 10 ரூபாவும் குறைக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசியப் பொருள்கள் 11 மீதான விலைகள் குறைக்கப்பட்டுள்ளதுடன். குழந்தைக்களுக்கான பால்மாவு 100 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளில் குறைந்த வருவாயுள்ள குடும்பங்களுக்கு என 100,000 புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளதுடன் இறப்பர்த் தொழிலுக்கு 2 ஆண்டுகள் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

கல்வித்துறைக்கு 90 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டக் கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இலவச இணையவசதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் செய்திப்பத்திரிகை மற்றும் சஞ்சிகை மீதான இறக்குமதி வரி முற்றாக நீக்கப்பட்டிருக்கிறது.

சிலாபம், மிரிஸ்ஸ, கல்முனை மற்றும் வல்வெட்டித்துறையில் மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, மீனவர்களுக்கு 10 இலட்சம் ரூபா வரை காப்புறுதி ஒன்று அறிமுகம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

தங்கம் இறக்குமதி செய்வதற்காக வரி நீக்கப்பட்ட 50 அனுமதிப்பத்திரங்களைப் புதிதாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக 200 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட உள்ளது.

இலங்கையில் அரசியல்வாதிகளுக்கு சலுகை விலையில் வாகனங்கள் வாங்குவதற்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தை நீக்கம் செய்வதற்கும் யோசனை முன்வைக் கப்பட்டுள்ளது.

இது சாதாரண மக்களுக்கு ஓரளவு திருப்தியளிக்கக்கூடிய வரவு செலவுத் திட்டமாக பொதுவாகக் கருதப்பட்டாலும், எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மையமாகக்கொண்டு இது தயாரிக்கப்பட்டுள்ளது எனத் தமது வழமையான குற்றச்சாட்டுகளை எதிர்தரப்புகள் முன்வைக்கத் தொடங்கி விட்டன.


இதேநேரம்,திட்டவட்டமான நீண்டகாலப் பொருளாதார இலக்குகள் எதுவும் இல்லாத வெற்று பட்ஜெட்' என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். இதன் பலாபலன் என்ன என்பதைப்பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### முத்துத்தம்பி மகாதேவா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி மகாதேவா 25.11.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி -தையல்நாயகி தம்பதி யரின் மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் -சின்னம்மா தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கமலாதேவியின் அன்புச் சகோதரனும் கருணாநிதி, அன்பழகன் (பிரான்ஸ்), ஆனந்தநாயகி, மஞ்சுளா, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் அமிர்தலிங்கம், வசந்தராஜன் ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (66447)(12.15) குடும்பத்தினர்.

### திருமதி அன்னரத்தினம் கார்த்திகேசு



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் நிலாவரை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னரத்தினம் கார்த்திகேசு 24.11.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.11.2015) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத் தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

நிலாவரை மேற்கு,புத்தூர். (66445)(11,15) குடும்பத்தினர்.

### திருமதி செல்வலட்சுமி இராசரத்தினம்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வலட்சுமி இராசரத்தினம் நேற்று (25.11.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குரும்பசிட்டி தம்பிப்பிள்ளை இராசரத்தினம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையாபிள்ளை நல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற மனோரஞ்சிதன் மனோன்மணியின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், இளையதம்பி ஆகியோரின் மருமகளும்,காலஞ்சென்ற சாரதாதேவி நடராசா, பாரதாதேவி சொர்ணராஜசிங்கம், சுதாதரன், நரேந்திரன் (லண்டன்), சிறீதரன் (இளைப்பாறிய தொழில் நீதி மன்ற நீதிபதி), சுபத்திராதேவி திருச்செல்வன், யசோதராதேவி இரா ஜேந்திரம் (கனடா), மனோகரன் (டென்மார்க்), லங்காதேவி மகேந்திரன் (கனடா) ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரியும், தயாபரன், பிரபாகரன் (சிங்கப்பூர்) ஆகி யோரின் சிறிய தாயாரும், பாலகுமார், சகிதேவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.11.2015) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடமான இரண்டாம் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவிலில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கொக்கு வில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்பதி வீதி,கொக்குவில். (66301)(11,15) தகவல்: சி.திருச்செல்வன் (இளைப்பாறிய ஆசிரியர்)

### திருமதி இராசேஸ்வரி இராசரத்தினம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேஸ்வரி இராசரத் தினம் 21.11.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் தங்கச்சியம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்தையா மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தி னத்தின் பாசமிகு மனைவியும் வதனமோகன் (டோகா), சுபகரன், ஜெயகரன் (கனடா), ராதிகா, கஜகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிரேகா, ரூபமலர், சிந்துஜா, ஜீவதாசன், வினோதினி ஆகியோரின் அன்பு மாமியும் செல்வநாயகம், பாலச்சந்திரன், மனோ கரன்,ஞானேஸ்வரி(கனடா), சறோஜினிதேவி ஆகியோரின் சகோதரியும் உமாவேந்தன், குருவர்ணன், லோசனா, பிரணவி, பிரமிலன், யஸ்வின், தேனுஜன்,குகப்பிரியன் ஆகியோரின் பேர்த்தியும் தர்மராஜா (இந்தியா), தேவராஜா,காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் யோகராஜா (லண்டன்), தங்கராஜா, காலஞ்சென்ற அருமைநாயகி மற்றும் செல்வராணி, வரத ராஜா(இந்தியா), இராஜேஸ்வரி, கிருஷ்ணகுமாரி, விஸ்வேஸ்வரன் (கனடா), மதுரமோகனா, காலஞ்சென்ற பாலுபரமேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2015) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சிவியாகாடு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
077 0563 987 (66446)(14.15.17)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

## நூலகங்களில் பேணல் நிலையங்களை அமைக்க ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

சாவகச்சேரி,நவ.26

வடமாகாண உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்படும் பொது நூலகங்களில் 'நூலகங்களில் பேணல் நிலையங்களை அமைத்தல்' தொடர்பான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன. தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் ஏற்பாட்டில் நூலக விஞ்ஞானத்தில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர் தலைமையிலான குழுவினர் இன்று தொடக்கம் மூன்று நாள்கள் வடமாகாணத்தில் ஆரம்பக் கட்ட கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.பொது நூலக மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், பொது நூலக நூலகர் கள் ஆகியோரைக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி,நவ.26

இலங்கை முதலுதவிச் சங்கத்தின் தொண்டர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். இலங்கை முதலு தவிச் சங்க வட மாகாண ஆணை யாளர் பொ.அருந்தவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய மத்திய நிலைய வழிகாட்டல் ஆலோசனை அலுவலர் க.கூஈஸ்வரன், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன், இலங்கைச் செஞ் சிலு வைச் சங்க ஆலோசகர் கா.சிவ ஞான சுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-9)

## பிள்ளையார் கதையும் இலட்சார்ச்சனையும்

யாழ்ப்பாணம்,நவ.26

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை உற்சவமும் இலட்சார்ச்சனையும் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கஜமுகாசுரன் போர் திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை கணபதி ஹோமமும் இடம்பெறும். இதையடுத்து மறுநாள் பெருங்கதை முடிவுற்று 17 ஆம் திகதி வியாழக்கிழமை திருவெம்பாவை ஆரம்பமாகும் (ஐ-115)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

நயினாதீவு,நவ.26

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய விசேட வழிபடுநர் மகா சபை வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அறங்காவலர் சபைத் தலைவர் கா.ஆ.தியாகராசா தலைமையில் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறும். (ஐ)

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் ஜெகநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் ஜெகநாதன் 24.11.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஜெகநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சந்தைவீதி, உடுப்பிட்டி. (66305)(11,15,17) குடும்பத்தினர்.


## குடாக்கடலில் களங்கட்டி மீன்பிடித்தொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்.குடாப்பரப்பு மற்றும் தீவுப் பகுதி கடற்பகுதியில் களங்கட்டி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை, கடல் கொந்தளிப்பு, கடுமையான மழை யின் தாக்கத்தால் கடலில் போடப்பட்ட களங்கட்டி வலைகள் சேதப் பட்டுள்ளன. இதன் காரணத்தால் களங்கட்டி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் மீன்பிடி த் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. வேலணை, புங்குடுதீவு,அல்லைப்பிட்டி, பாஷையூர் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கூடுதலாக களங்கட்டி மீன்பிடியில் ஈடுபட்டு வரு கின்றனர். இந்தக் களங்கட்டி மீன்பிடித்தொழில் பாதிக் கப்பட்டதால் இந்த முறை மழைக் காலத்தில் கூடு தலான மீன்களின் பிடிபாடு குறைந்து காணப்படுகின்றது என்று கடற் றொழில் நீரியல்வளத்திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரி வித்தார். இந்த மீன் பிடிபாடு குறைந்ததால் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் தென்பகுதிக்கான மீன்களின் ஏற்றுமதியும் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. கூடுதலாக இந்த இரண்டு மாதங்களிலும் கூடுதலாக ஒட்டி, ஓரா, விளை, பாரை,கீளி, கலவாய் போன்ற மீன் இனங்கள் கூடுதலாகப் பிடிபடுவது வழக்கம். மீன்களின் பிடிபாடு குறைந்ததால் மீனவர்களின் தொழிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## மரண அறிவித்தல்

### கந்தையா தில்லையம்பலம்



உரும்பிராய் கிழக்கு, உரும் பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தில்லையம்பலம் 25.11.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதி யரின் மகனும் காலஞ் சென்றவர்களான தம்பையா - சோதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் செல்வமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திலகமணி, ஞானலட்சுமி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவிச்சந்திரன் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (நோர்வே), காலஞ்சென்ற கலாவதி மற்றும் இளங் கோவன், ஜனனி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்திரா(ஜேர்மனி), சாந்தினி(நோர்வே), ஜெகதீஸ்வரன், குணசீலன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஜனார்த்தனன் (ஜேர்மனி), திவாகரன்(ஜேர்மனி), சர்மிலா (நோர்வே), சோபனா (நோர்வே), பிரியங்கா (நோர்வே), ஜெனோஜினி-பிரணவன் (கனடா),ஜெர்ஜினி, பிரவீனா( கனடா), பிரவீனன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசவீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (66505)(12.15.17)

தகவல்:
மனைவி
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுதான்

**காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக்குழுவின் வல்லுநர்கள் இலங்கையில் காணாமற் போனவர்களின் குடும்பங்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்ததோடு மட்டுமன்றி, திருகோணமலையிலுள்ள கடற்படை முகாம் நான்காம் மற்றும் ஆறாம் மாடிகள், கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு, காலியிலுள்ள பூசா தடுப்பு முகாம் ஆகிய இடங்களில் இரகசியத் தடுப்பு முகாம்கள் உள்ளதைக் கண்டறிந்ததாக பேர்னாட் டுகெய்ம் ஊடக மாநாட்டில் குறிப்பிட்டார்.**

நீங்கள் எல்லோரையும் சில வேளைகளில் முட்டாள்களாக்கலாம், சிலபேரை எல்லா நேரங்களிலும் முட்டாள்களாக்கலாம், ஆனால் எல்லோரையும் நீங்கள் எல்லா நேரத்திலும் முட்டாள்களாக்க முடியாது என்றார் ஆபிரகாம் லிங்கன்.

இலங்கை அரசானது தனது நாட்டில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை இன்னமும் மேற்கொள்ளத் தொடங்கவில்லை என பத்து நாள்களாக இலங்கையில் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொண்ட காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக்குழு கண்டறிந்துள்ளது.

இலங்கையில் தாங்கள் தங்கியிருந்த காலப்பகுதியில் எவ்வாறான உண்மைகளைக் கண்டறிந்துள்ளனர் என்பது தொடர்பாக காணாமற் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா பணிக்குழுவின் உபதலைவர் பேர்னாட் டுகெய்ம், தனது சக அதிகாரிகளான ரா-உங் பைக் மற்றும் ஏரியல் டுளிற்ஸ்கி ஆகியோருடன் இணைந்து கடந்த புதன்கிழமை கொழும்பிலுள்ள ஐ.நா தலைமைச் செயலகத்தில் ஊடக மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக்குழுவின் வல்லுநர்கள் இலங்கையில் காணாமற் போனவர்களின் குடும்பங்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்ததோடு மட்டுமன்றி, திருகோணமலையிலுள்ள கடற்படை முகாம், குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் நான்காம் மற்றும் ஆறாம் மாடிகள், கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு, காலியிலுள்ள பூசா தடுப்பு முகாம் ஆகிய இடங்களில் இரகசியத்தடுப்பு முகாம்களைக் கண்டறிந்ததாக பேர்னாட் டுகெய்ம் ஊடக மாநாட்டில் குறிப்பிட்டார்.

அதிபர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் காணாமற் போனோர் தொடர்பான தகவல்களை இலங்கை முழுவதிலும் சேகரிப்பதற்கான ஆணைக் குழுக்கள் முதலில் 1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டன. இதன் பின்னர், முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக் குழு செயற்பட்டது.

எனினும், கடந்த காலங்களில் இலங்கை ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட இவ்வாறான ஆணைக் குழுக்களிடம் காணாமற் போனவர்களின் உறவினர்கள் தமது துன்பங்களைக் கூறிய போதிலும் எவ்வித பயனும் கிட்டவில்லை.

இலங்கையின் உள்நாட்டில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் சில மாதங்கள் செயற்பட்ட போதிலும் இந்த ஆணைக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் எந்தவொரு நீதியின் அடிப்படையிலும் உருவாக்கப்படவில்லை.

ஆனால் பத்து நாள்கள் மட்டுமே இலங்கையில் தனது விசாரணைகளை மேற்கொண்ட ஐ.நா பணிக்குழுவானது வடக்கு கிழக்கில் மட்டுமன்றி, தென் இலங்கையிலும் காணாமற் போனோர் தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பணிக்குழுவானது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற சில முக்கிய இடங்களுக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் இவ்வாறான முறைப்பாடுகளைக் கூட காணாமற் போனோர் தொடர்பான உள்ளூர் ஆணைக்குழுக்கள் தமது கவனத்தில் எடுத்துக் கொண்டதில்லை.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு உள்ளூர் விசாரணைப் பொறிமுறையை இலங்கை அரசு உருவாக்குவதற்கான நகர்வை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்த்துள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பில் கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவதற்கு இலங்கை அரசு முன்வந்துள்ளது. கடந்த காலங்களில் காணாமற் போனோர் குடும்பங்களுக்கு நீதி வழங்குவதில் உள்ளூர் ஆணைக்குழுக்கள் தவறியுள்ளதால் போர்க் குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த வாரம் இலங்கையில் தங்கியிருந்த காணாமற் போகச் செய்யப்பட்டோருக்கான ஐ.நா பணிக்குழுவின் வல்லுநர்கள் பத்து நாள்களாகத் தமது விசாரணைகளை மேற்கொண்டனர். இது உண்மையில் இலங்கை மீதான பல்வேறு மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான ஒரு ஆரம்ப கட்டமாக நோக்கப்படுகிறது.

சுயாதீனமாக இயங்கும் அனைத்துலக அமைப்பான ஐ.நா பணிக்குழு, இலங்கையின் தற்போதைய அரசானது அனைத்துலக சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதானது வரவேற்கப்படத்தக்கது எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசானது தனது வாக்குறுதிகளை உறுதியாகவும், முழுமையாகவும், சட்டரீதியாகவும், பங்களிப்புடனும் மேற்கொள்ள வேண்டிய சவாலைக் கொண்டுள்ளதாக பணிக்குழுவின் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக, பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு உண்மை, நீதி, உறுதிப்பாடு போன்றவற்றை வழங்குவதை உறுதிப்படுத்தக் கூடிய பொறிமுறையை இலங்கை அரசு கைக்கொள்ள வேண்டும் எனவும் இந்தப் பணிக்குழு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் மீளிணக்கப்பாட்டை உருவாக்கிக் கொள்வதற்கு இது மிகவும் அவசியமானது எனவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்காதவிடத்து மீளிணக்கப்பாட்டை உருவாக்க முடியாது எனவும் ஐ.நா பணிக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

குறுகிய நாள்கள் மட்டுமே இலங்கையில் தங்கியிருந்த போதிலும், நாட்டில் ஆரோக்கியமான மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கு உண்மை மற்றும் நீதி போன்றவை மிகவும் இன்றியமையாதவை என்பதற்கான ஒரு சாட்சியமாகவே ஐ.நா பணிக்குழுவின் இப்பயணம் அமைந்துள்ளது.

இப் பணிக்குழு இரகசியத் தடுப்பு முகாங்களுக்கும் நேரடியாகச் சென்று சாட்சியங்களைச் சேகரித்துள்ளது.

இவ்வாறான சில ஆரம்பகட்ட அவதானிப்புகளுக்கு அப்பால், அடுத்த ஆண்டு ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வின் போது இலங்கையால் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை தொடர்பான விவரங்களை ஐ.நா பணிக்குழுவின் வல்லுநர்கள் வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே இலங்கை அரசானது போரின் போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக எவ்வித பாரபட்சமுமின்றிய விசாரணையை மேற்கொள்வதன் மூலம் தனது பணியை ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது.

இதேவேளையில், காணாமற் போகச் செய்யப்பட்டோருக்கான ஐ.நா பணிக்குழுவானது இலங்கையில் பத்து நாள்கள் பணி புரிந்த அதே காலப்பகுதியில், இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் பங்களிப்புடன் தென்னாபிரிக்காவின் டர்பனில் இலங்கையில் அமைதி மற்றும் நீதியை உருவாக்குவதற்கான தென்னாபிரிக்காவின் ஒற்றுமை அமைப்பால் சிறப்புச் சந்திப்பு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பின் இறுதியில், இலங்கையில் வாழும் தமிழ் சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான பொறுப்புக் கூறல், மீளிணக்கப்பாடு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் நிலையான சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கான காத்திரமான நம்பகத்தை உருவாக்குவதற்கான ஒரு சூழலை உருவாக்குமாறு இலங்கை அரசு மீது அழுத்தத்தைக் கொடுப்பதற்கான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆகவே இலங்கையை நோக்கிய ஐ.நா பணிக்குழு வல்லுநர்களின் அண்மைய பயணமானது காலத்துக்குப் பொருத்தமானதாகும். இதனைக் கருத்திற் கொண்டு இலங்கையின் தலைவர்கள் நாட்டில் சமாதானம் மற்றும் மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்காக கடந்த காலத் தவறுகளை விசாரணை செய்து நீதி மற்றும் உண்மையை கண்டறிந்து கொள்ள வேண்டும்.

இதற்கான சரியான பாதையை இலங்கைத் தலைவர்கள் தேர்ந்தெடுப்பதற்கான காலம் தற்போது ஏற்பட்டுள்ளது.

நன்றி: புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 8 | | 2 | | | | |
| | | 4 | | | 6 | | 9 | 8 |
| | | | | | | 3 | | |
| 5 | | | 4 | | 1 | | 3 | |
| | 6 | 9 | 3 | | 2 | 7 | 1 | |
| | 1 | | 7 | | 9 | | | 5 |
| | | 6 | | | | | | |
| 9 | 8 | | 6 | | | | 5 | |
| | | | | 3 | | | 4 | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 6 | 9 | 5 | 2 | 7 | 4 | 3 |
| 5 | 3 | 7 | 4 | 1 | 8 | 2 | 9 | 6 |
| 4 | 9 | 2 | 6 | 7 | 3 | 1 | 8 | 5 |
| 6 | 7 | 9 | 3 | 2 | 5 | 8 | 1 | 4 |
| 2 | 4 | 5 | 1 | 8 | 6 | 9 | 3 | 7 |
| 3 | 1 | 8 | 7 | 4 | 9 | 6 | 5 | 2 |
| 7 | 5 | 3 | 8 | 6 | 1 | 4 | 2 | 9 |
| 8 | 2 | 4 | 5 | 9 | 7 | 3 | 6 | 1 |
| 9 | 6 | 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**கார்த்திகை-11 வெள்ளிக்கிழமை (27.11.2015)**

திதி:
துதியை: பி.இ. 02.02 வரை
நட்சத்திரம் :
மிருகசீரிடம் பி.இ.05.07

சுபநேரம்:
06.12-07.42 வரை
இராகு காலம்:
10.42-12.12 வரை


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



**மக்கள் சேவையே மகேசன் சேவை**

கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் இருக்கிறார். இதைத் தவிர தனித் தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. மக்களுக்கு ஒருவன் செய்யும் சேவை அந்த மகேசனுக்கே செய்யும் சேவையாகும். இதுவே உண்மை. உண்மை, தூய்மை, சுயநலமின்மை இது மூன்றும் எவரிடமெல்லாம் இருக்கிறதோ அவர்களை நசுக்கக் கூடிய சக்தி விண்ணுலகு, மண்ணுலகு என எந்த உலகிலும் இல்லை. ஏன் பிரபஞ்சமே எதிர்த்து நின்றாலும் கூட அவர்களை வெல்ல முடியாது.

## முருங்கைக்கீரையின் மருத்துவக் குறிப்புகள்



முருங்கைக்காய் போன்றே முருங்கை கீரையிலும் ஏராளமான சத்துக்கள் அடங்கியுள்ளன. வாரத்துக்கு இரு முறையாவது இதனை உணவில் சேர்த்துக் கொள்வதால் நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்கும்.

1.முருங்கைக் கீரையால் உடற் சூடு, மந்தம், தலை நோய், மூர்ச்சை, வெறிநோய், கண்ணோய் போன்ற நோய்கள் நீங்கும்.

2.முருங்கைக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டால் உடல் வலுப் பெறும்.

3. குருதிசுத்தமாகும். முருங்கைக் கீரையில் அதிகமாக இரும்புச் சத்து மற்றும் கல்சியம் உள்ளன.

4. உடல் மெலிவாக இருப்பவர்கள் வாரம் இரண்டு முறை முருங்கைக் கீரையை உண்டு வந்தால் உடல்-தேறும்.

5.முருங்கை இலையில் "விற்றமின் எ, பி, சி", கல்சியம், இரும்புச்சத்து நிறைந்துள்ளன.

6.ஒரு கிண்ணம் முருங்கைச் சாறில் 9 முட்டை அல்லது அரைக் கிலோ வெண்ணை அல்லது 8 கோப்பை பாலில் அடங்கி இருக்கும் 'விற்றமின் ஏ உள்ளது.

7.வயிற்றுப் புண்ணை ஆற்றும். அஜீரண கோளாறுகளைப் போக்கி மலச்சிக்கலை நீக்கும்.

8.குருதியில் கலந்து இருக்கும் தேவையில்லாத நீர்களை பிரித்து வெளியேற்றும்.

9. சிறுநீரைப் பெருக்குவதால் உயர் குருதி அழுத்த நோய் இருப்பவர்கள் பக்க விளைவு ஏற்படுத்தும் மாத்திரைகளை தினமும் எடுத்துக் கொள்வதிலிருந்து தப்பிக்கலாம்.

10.உடற் சூட்டைக் குறைக்கும். கண் பார்வை நரம்புகள் வலுப்பெறும். பித்தத்தைக் குறைக்கும்.

11.இளநரையைநீக்கும். உடல்சருமத்தை பளபளக்கச் செய் யும்.

12.தாய்ப்பாலை அதிகமாக ஊட்டுபவர்கள், குழந்தை பெற்றெடுத்த தாய்மார்கள் கண்டிப்பாக உணவில் முருங்கைக் கீரையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## மனிதனும் அவனது தோற்றமும்

உடம்பு, சிந்தை, ஆத்மா இவற்றின் ஒன்றிணைவே மனிதன். இந்த மூன்றும் மனிதனது தெய்வீக உயர்வுக்கும் படிகளாக அமைகின்றன.

உடம்பு செயற்பாடுகளுக்குரிய கருவி. (செய்வினை) சிந்தை அறிதல் சம்பந்தமானதோடு தொடர்புடையது (அறிவு). ஆத்மா மாற்றமில்லாதது. நிலைத்திருக்கும் உண்மை- ஆத்மா மனிதனது தெய்வீகத் தன்மையாகும். (நிலைத்திருத்தல்). செய்தல், அறிதல், நிலைத் திருத்தல் என்ற மூன்றுமே மனித தோற்றத்தின் பிரதி விம்பங்களாகும். உடம்பு, சிந்தை, ஆத்மா ஆகியவற்றின் ஒன்றிணைப்பும் இசை வாக்கமும் மனிதனை மனித நிலையிலிருந்தும் தெய்வீக நிலைக்கு உயர்த்திக் கொள்ள உதவும். உடம்பு, சிந்தை, ஆத்மாவின் ஒற்றுமையின்மை மனிதனை மிருகத்தின் நிலைக்கு இறக்கி விட்டு விடும்.



**சாயி சிந்தனை**

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | சாவகச்சேரி | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | யாழ்ப்பாணம் | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 800 | 600 | 650 | 700 | 600 | 500 |
| நண்டு | 600 | 400 | 200 | 350 | 300 | - |
| கணவாய் | 550 | 600 | 650 | 600 | 600 | - |
| பாரை | 500 | 500 | 350 | 550 | 400 | 400 |
| சுறா | - | 500 | 600 | 600 | 400 | - |
| சீலா | 400 | 400 | - | 400 | 350 | 350 |
| விளை | 400 | 500 | 400 | 450 | 600 | 400 |
| முரல் | 400 | 350 | 400 | 300 | 300 | - |
| கும்பிளா | 400 | 300 | 300 | 400 | 300 | 250 |
| கிழாக்கன் | - | 500 | - | 400 | 400 | - |
| ஒரா | 500 | 350 | - | 400 | 350 | 300 |
| திரளி | 200 | 200 | 200 | 300 | 200 | - |
| நகரை | 250 | 300 | 200 | 300 | 150 | 300 |
| சூடை | 250 | 100 | 100 | 120 | 100 | - |
| ஒட்டி | 300 | 150 | 250 | 300 | 250 | - |
| திருக்கை | 300 | 300 | 100 | 250 | 150 | 250 |
| பாலை | 400 | 200 | 200 | 500 | 400 | - |
| வாழை | 250 | 100 | 200 | 300 | 100 | - |
| கொய் | 50 | 100 | 50 | 100 | 100 | - |
| மதனம் | 300 | 200 | - | 250 | 150 | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | - | 80 | 120 | 80 | - | 50 |
| கத்தரி | 160 | 150 | 160 | 180 | 160 | 160 | 90- 100 |
| கரட் | 140 | 140 | 180-400 | 120 | 240 | 320 | 240 |
| மரவள்ளி | 40 | 60 | 50 | 50 | 50 | 40 | 30 |
| பயிற்றை | 250 | 240 | 250-300 | 180 | 220 | 240 | 250 |
| பாகல் | 280 | 240 | 300 | 160 | 240 | 200 | 200 |
| கருணைக்கிழங்கு | 80 | 120 | 100 | 100 | 100 | 130 | 80 |
| பெ.வெங்காயம் | 150 | 150 | 160 | 140 | 140 | 160 | 120 |
| சி.வெங்காயம் | 120 | 130 | 120 | 120 | 130 | 120 | 130 |
| பூசணி | 50 | 60 | 40 | 50 | 50 | 80 | 45 |
| தக்காளி | 160 | 150 | 160 | 140 | 160 | 160 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 | 50 | 80 | 40 |
| கீரை | 50 | 60 | 50 | 30 | 40 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 | 40 | 30 | 40 | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 200 | 700-800 | 600 | 600 | 800 | 800 |
| புடோல் | 140 | 100 | 120- 160 | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 150 | 120 | 200 | 180 | 160 | 200 | 120 |
| வெண்டி | 140 | 80 | 160 | 120 | 120 | 160 | 80 |
| போஞ்சி | 200 | 220 | 280 | 240 | 220 | 200 | 230 |
| லீக்ஸ் | 150 | 200 | 120 | 140 | 160 | 200 | 140 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50-60 | 40 | 40 | 45 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 100 | 90 | 100 | 80 | 100-120 |
| தேசிக்காய் | 400 | 280 | 250-400 | 320 | 240 | 200 | 150 |
| வல்லாரை | 30 | 30 | 10 | 20 | 20 | 20 | 12 |
| கறிமிளகாய் | 200 | 280 | 800 | 160 | 350 | 300 | 300 |
| இராசவள்ளி | - | - | - | - | - | - | - |
| முருங்கைக்காய் | 500 | 300 | 600 | - | 240 | - | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கார்த்திகை மாத பலன்கள்

**17.11.2015 முதல்**
**16.12.2015 வரை**

*(கார்த்திகை மாதத்துக்கான பலன்கள் குறித்த நேற்று வெளியான பகுதியின் தொடர்ச்சி)*

**மகரம்**

ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரை வாடி நிற்கும் கொக்கைப்போல் காத்திருந்து காய் நகர்த்துவதில் வல்லவர்கள் நீங்கள். மெத்தப் படித்தவர்களைக் கூட உங்கள் அனுபவ அறிவால் அசத்திவிடுவீர்கள். இந்த மாதம் முழுக்க சூரியன் இலாப வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் எதையும் சாதிக்கும் வல்லமை உண்டாகும். உங்கள் ராசிநாதன் சனிபகவானும் 11 ஆம் இடத்திலேயே தொடர்வதால் குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். சொந்த ஊரில் மதிப்பு, மரியாதை உயரும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். தூரத்துச் சொந்த பந்தங்கள் வீடுதேடி வருவார்கள். வெகுநாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்போது நிறைவேறும். 9 ஆம் வீட்டில் ராகுவும், செவ்வாயும் நிற்பதால் தந்தையாரின் உடல்நிலை பாதிப்படையும். பிதிர்வழிச் சொத்துப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காண்பது நல்லது. தந்தைவழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உடன்பிறந்தவர்களால் சங்கடங்கள் வரும். வழக்கில் வழக்கறிஞரைக் கலந்தாலோசித்து முடிவெடுக்கப் பாருங்கள். வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும். புதனும், சுக்கிரனும் சாதகமான வீடுகளில் செல்வதால் பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். விலை உயர்ந்த மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கேது வலுவாக 3 இல் நிற்பதால் மனோபலம் கூடும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

மாணவ, மாணவிகளே! கணிதம், வேதியியல் பாடங்களுக்கு அதிக நேரம் ஒதுக்குங்கள். ஆசிரியர்களிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கன்னிப் பெண்களே! பெற்றோர் உங்களுடைய புது முயற்சிகளை ஆதரிப்பர். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். அரசியல்வாதிகளே! எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வியாபாரத்தில் பழைய மீதிகள் கிடைக்கும். வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்குச் சிலர் கடையை மாற்றுவீர்கள். பங்குதாரர்கள் உங்களுடைய புதிய திட்டங்களை ஆதரிப்பார்கள். வேலையாள்கள் உங்களுடைய அருமையைத் தெரிந்து கொள்வார்கள். பதிப்பகம், மருந்து, உணவு வகைகளால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களுக்கு சாதகமாக இருக்கிறாரா, பாதகமாக இருக்கிறாரா என்று உணர்ந்துகொள்ள முடியாமல் போகும். எவர் எப்படி இருந்தாலும் எம்முடைய கடமையைச் சரிவர செய்துவிடுவோம் என்ற மனப்பான்மையில் நீங்கள் கடினமாக உழைப்பீர்கள். நேர்மூத்த அதிகாரியை விட, மேல்மட்ட அதிகாரி ஆதரவாக இருப்பார். சக ஊழியர்களால் மறைமுக விமர்சனங்கள் வரக் கூடும். விவசாயிகளே! தண்ணீர்ப் பற்றாக்குறையை நீக்க புது வழி கிடைக்கும். மரப் பயிர்களால் இலாபமடைவீர்கள். எதிர்பாராத திடீர் நன்மைகள் சூழும் மாதமிது.

**பரிகாரம்:** சர்பேஸ்வரரைத் தரிசித்து வாருங்கள். வயதானவர்களுக்கு கம்பளியும், செருப்பும் வாங்கிக் கொடுங்கள்.

**கும்பம்**

பெரிய பிரச்சினைகளைப் பிரமாதமாகச் சமாளிக்கும் நீங்கள், சின்ன விடயங்களில் சிக்குவீர்கள். உழைத்தும் போதிய உயர்வு இல்லையே எனப் புலம்புவீர்கள். இந்த மாதம் முழுக்க உங்களின் சப்தமாதிபதி சூரியனின் ராசிக்கு 10 இல் அமர்வதால் உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். உங்கள் ராசிநாதன் சனிபகவானும் 10 ஆம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் மறைமுகமாகச் செயற்பட்டவர்களை இனங் கண்டறிந்து ஒதுக்குவீர்கள். உங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு இதோ, அதோ என்று இழுத்தடித்தவர்கள் இப்பொழுது திருப்பித் தருவார்கள். என்றாலும் வேலைச்சுமை அதிகரிக்கும். வீண்பழியும் வரக் கூடும். செவ்வாயும், ராகுவும் 8 ஆம் வீட்டிலேயே நிற்பதால் அலைச்சல், மன இறுக்கம், வீண் விரயம், ஒருவித படபடப்பு, நெஞ்சு வலி, காய்ச்சல், இரும்புச்சத்துக் குறைபாடு வந்து செல்லும். தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். வாகனத்தை வேகமாக இயக்க வேண்டாம். எந்தக் காரியத்தைச் செய்தாலும் கொஞ்சம் யோசித்து செய்யுங்கள். சிலர் உங்களை தூண்டிவிட்டு, சீண்டி விட்டு சினம் கொள்ள வைத்து வேடிக்கை பார்ப்பார்கள். சொத்து விடயத்திலும் நீங்கள் கொஞ்சம் அனுசரித்துப் போங்கள். குருபகவான் வலுவாக இருப்பதால் பிரச்சினைகளைக் கண்டு அஞ்சாமல் பதிலடி கொடுக்கும் அளவுக்கு மனத் தைரியம் பிறக்கும். 2 இல் கேது நீடிப்பதால் வீண் செலவுகள், கண்வலி ஏற்படக்கூடும். காலில் அடிபட வாய்ப்பிருக்கிறது. இடம், பொருள், ஏவலறிந்து பேசப் பாருங்கள். கன்னிப் பெண்களே! பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசியல்வாதிகளே! கட்சித் தலைமை உங்களை நம்பி சில ரகசியப் பொறுப்பை ஒப்படைக்கும். மாணவ, மாணவிகளே! பொது அறிவுத் திறமையை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பெற்றோர் நீங்கள் நீண்ட நாள்களாகக் கேட்டுக் கொண்டிருந்ததை வாங்கித் தருவார்கள்.

வியாபாரத்தில் ஓரளவு இலாபம் உண்டு என்றாலும் அவசரப்பட்டு பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். சின்னச் சின்ன நஷ்டங்கள் வரும். பழைய நிலுவைகளைப் போராடி வாங்குவீர்கள். வாடிக்கையாளர்களை மனங் கோணாமல் நடத்துங்கள். உத்தியோகத்தில் எவ்வளவு உழைத்தாலும் ஓர் அங்கீகாரமோ, பாராட்டுதலோ இல்லாமல் போகும். மேலதிகாரியின் குறைநிறைகளையெல்லாம் சுட்டிக் காட்ட வேண்டாம். பணிகளைக் கொஞ்சம் போராடி முடிக்க வேண்டி வரும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப் பாருங்கள். சட்டத்துக்குப் புறம்பான வகையில் எவருக்கும் உதவ வேண்டாம். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். கலைத்துறையினரே! மூத்த கலைஞர்களின் வழிகாட்டல் மூலம் வெற்றியடைவீர்கள். விவசாயிகளே! உங்களின் கடுமையான உழைப்புக்கு ஏற்ப விளைச்சல் கூடும். வங்கியில் இழுத்தடித்த கடன் தொகை இப்பொழுது கிடைக்கும். கடின உழைப்பாலும், அனுபவ அறிவாலும் கரையேறும் மாதமிது.

**பரிகாரம்:** பெருமாளைத் தரிசித்து வாருங்கள். முதியோர் இல்லங்களுக்குச் சென்று உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

**மீனம்**

தாய் மண்ணின் மீதும், மொழியின் மீதும் தீராத தாகம் கொண்ட நீங்கள், கடல் தாண்டிப் போனாலும் கலாசாரத்தை மீற மாட்டீர்கள். எதையும் உடனே முடிப்பதில் வல்லவர்கள். புதனும், சுக்கிரனும் சாதகமான வீடுகளில் செல்வதால் போட்டி பொறாமைகளையும் தாண்டி முன்னேறத் துடிப்பீர்கள். இருந்தாலும் 7 இல் ராகுவும், செவ்வாயும் நிற்பதால் அவ்வப்போது விவாதங்களும் வந்து செல்லும். முதுகுத் தண்டில் வலி, சமிபாட்டுக் கோளாறு, பித்தப்பையில் கல் வரக்கூடும். உடன்பிறந்தவர்களால் அன்புத் தொல்லைகள் அதிகரிக்கும். ஒரு சொத்தை விற்றுச் சில பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் இருந்து கொண்டேயிருக்கும். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். சனி சாதகமாக இருப்பதால் தொலைநோக்குச் சிந்தனை அதிகமாகும். சூரியன் 9 இல் நிற்பதால் தந்தைக்கு மூட்டு, முழங்கால் வலி, நெஞ்சு எரிச்சல் வந்துபோகும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். தந்தைவழிச் சொத்தைப் பெறுவதில் தடைகள் வந்து போகும். 6 இல் குரு மறைந்து கிடப்பதால் இனந் தெரியாத கவலைகள் வந்துபோகும். உள்மனதில் ஒருவித போராட்டம் எழும்பும். எவருக்கும் பிணைக் கையெழுத்திட வேண்டாம். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். குடும்ப அந்தரங்க விடயங்களையெல்லாம் வெளியில் சொல்லி ஆறுதல் தேட வேண்டாம். ராசிக்குள் கேது இருப்பதால் வேலைச் சுமையால் சோர்வு, களைப்பு வந்து நீங்கும். வீண் கவலை அதிகமாகும். முக்கிய பணிகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது. கன்னிப் பெண்களே! போலியாக பழகியவர்களிடமிருந்து ஒதுங்குவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு உண்டு. மாணவ, மாணவிகளே! உங்களுடன் சுற்றித் திரிந்த நண்பர்கள் கூட நல்ல மதிப்பெண் பெற்று வெற்றி பெறக்கூடும். எனவே விதண்டாவாதம் பேசிக் கொண்டிருக்காமல் படிப்பில் அக்கறை செலுத்துங்கள். அரசியல்வாதிகளே! வெறும் அறிக்கை மட்டும் போதாது, தொகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுங்கள். வியாபாரத்தில் போட்டிகளால் இலாபம் குறையும். வேலையாள்களை நினைத்து வருத்தப்படுவீர்கள். பொறுப்பான, அமைதியான வேலை யாள் எனக்கு அமையவில்லையே என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். வாடகை இடத்தில் கடையை வைத்திருப்பவர்களுக்கு கடை உரிமையாளரால் தொல்லை அதிகரிக்கும். வாடகை அதிகப்படுத்தப்படுவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

**பரிகாரம்:** கற்பக விநாயகரைத் தரிசித்து வாருங்கள். தந்தையிழந்த பிள்ளைக்கு உதவுங்கள்.





## பெண்ணுரிமை

பெண்ணுரிமை ஒரு மாயை...
இந்த நிழற்படம் போல...
முதலாம் தலைமுறையே...!!!
கூண்டை உடைத்து வெளியே வா...
என அறைகூவல் விட்டு...
விவசாய நிலங்களை மட்டும்
தாராளமயமாக்கி... சிறப்பு
தொழில்மையங்களை அமைத்து
தோ[illegible] கட்டி நிற்கிறாள்...
அ[illegible] பெண்ணே...
அகிலம் ஆள வா... என போலி
அறைக் கூவல்...
உண்மை என நம்பிவந்த என்குலப்
உத்தமிகளை நாசமாக்கும்
பெட்டைத்தனம்... எங்கே
பெண்ணுரிமை..?..
விவாதங்களிலும்
விலை போகின்றனர் எம்
பெண்களே..... எங்கே
பெண்ணுரிமை...?
பெண்ணுரிமை ஒரு மாயை...
பெண்களுக்கு மட்டும்
பெண்களே போராடும் வரை....
பெண்ணுரிமை சாத்தியமில்லை...

–இணையவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வந்தரின் அறியாமை


ஒரு பெரும் செல்வந்தர் தம்மைச் சந்திக்க வந்த வயதான துறவியொருவரை அழைத்துப் போய் தமக்குச் சொந்தமான வயல், வரப்பு, தோப்பு ஆகியவற்றைப் பெருமையுடன் காட்டினார். "இவ்வளவும் என்னுடையவை சுவாமி' என்றார். அதற்கு அந்தத் துறவி, "இல்லையேயப்பா! இதே நிலத்தை தன்னுடையது என்று ஒருவன் சொன்னானே" என்றார். "யார் அவன்? எப்போது சொன்னான்?" என்றுசெல்வந்தர் சீறினார். "ஐம்பது வருடங்களுக்கு முன்" என்றார் துறவி. அதற்கு அந்தச் செல்வந்தர், "அது எனது தாத்தா தான். ஐம்பது ஆண்டுகளாக நாங்கள் இந்த நிலத்தை வேறெவருக்கும் விற்கவே இல்லை" என்றார். "இருபது ஆண்டுகளுக்கு முன் வேறொருவர் இது தன்னுடைய நிலம் என்றாரேயப்பா" என்று கேட்டார் துறவி "அவர் எனது அப்பாவாக இருக்கும்" என்றார் செல்வந்தர். "நிலம் என்னுடையது, என்னுடையது என்று என்னிடம் காட்டிய அந்த இருவரும் இப்போது எங்கே இருக் கிறார்கள்?" என்று துறவி கேட்டார். அதற்கு வயலுக்கிடையில் தெரிந்த இரு மண்டபங்களைக் காட்டி, அதோ "அந்த மண்டபங்களுக்குக் கீழே தான் அவர்களைப் புதைத்து வைத்திருக் கிறோம்" என்றார் அந்தச் செல்வந்தர். துறவி சிரித்துக்கொண்டே, "நிலம் இவர்களுக்குச் சொந்தமா..? அல்லது இவர்கள் நிலத்துக்குச் சொந்தமா..? என் நிலம், என் சொத்து, என் செல்வம் என்றவர்கள் நிலத்துக்குச் சொந்தமாகி விட்டனர். அவர்கள் இப்போது இல்லை. ஆனால் நிலம் மட்டும் இருக்கிறது. இது என்னுடையது எனக்கூறும் நீயும், ஒருநாள் இந்த நிலத்துக்குள் புதைக்கப்படுவாய். உனது மகன் வந்து இது என்னுடைய நிலம் என்பான்" என்று கூறி முடித்தார் துறவி. செல்வந்தர் தனது அறியாமையை எண்ணித் தலை குனிந்தார்.

# நம்பினால் நம்புங்கள்!

- ★ பறவைகள் விழுங்கும் மிகச்சிறிய நத்தைகளில் 15 சதவீதமானவை, பறவைகளின் வயிற்றுக்குள்ளே வசதியாகத் தங்கி, உயிரோடு உலகையே சுற்றி வரும்!
- ★ பூமியில் ஒவ்வொரு நிமிடமும் 6 ஆயிரம் முறை மின்னல்கள் தோன்றுகின்றன.
- ★ 2 மணி நேர மோட்டார் சைக்கிள் பயணத்தில் 500 கலோரிகள் செலவாகிறது.
- ★ சூரிய மண்டலம் தோன்றுவதற்கு முன்பே உருவான வைரமொன்று, இப்போது ஒரு விண்கல்லில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- ★ விஞ்ஞானிகள் புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கும் கைவிரல் அடையாள தொழில் நுட்பத்தின் மூலம், கைரேகை பதிவைக் கொண்டே போதை மருந்து உட்கொண்டிருத்தல், வெடிகுண்டு பயன்படுத்துதல், இதய நோய், அனீமியா ஆகிய விடயங்களைக் கண்டறிய முடியும்.
- ★ எமது காதுகளில் உள்ள குறும்பியும், தாடையின் அசைவும் சேர்ந்து, காதுகளில் சேரும் தூசு, அழுக்கு போன்றவற்றை நீக்கி விடுகின்றன.
- ★ 2050ஆம் ஆண்டில், எமது மூளையில் நிறைந்திருக்கும் அத்தனை தகவல்களையும் கணினியில் பதிவு செய்துவிட முடியும் எனக் கணித்திருக்கின்றனர் விஞ்ஞானிகள்.
- ★ யுரேனஸ் சூரியனை ஒருமுறை சுற்றி வர 84.01 ஆண்டுகள் ஆகும்.




# வர்ணம் தீட்டலாம் வாங்க



# சாத்தியம் இல்லாதவைகளை சாத்தியமாக்கும் சக்தி உன்னிடம்

காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கும் போது, ஒவ்வொரு மனிதனின் வெற்றியும், ஒவ்வொரு ஈடு இணையற்ற சாதனையும், சாத்தியம் இல்லாதது என்று அன்று கருதப்பட்டது. என்னால் முடியும் என்று நம்பி, துணிந்து செயலில் இறங்கிய எவரோ ஒருவரால் நிகழ்த்தப்பட்ட ஒன்று தான். இந்த ஈடு இணையற்ற சாதனையாகும். அப்படிப்பட்ட சாதனையாளர்கள் வரிசையில், தோமஸ் அல்வா எடிசன் , அலெக்ஸாண்டர் கிரகம் பெல், ரைட் சகோதரர்கள், மார்ட்டீன் லூதர் கிங் , பெண்களின் வாக்குரிமைக்காக போராடிய சூசன் பி.அந்தோணி போன்றவர்கள் அடங்குகின்றனர். மேலும் சிறைக்கைதியாக இருந்த ஒருவர், ஒரு நாட்டின் ஜனாதிபதியாவது சாத்தியம் இல்லை என்று, மற்றவர்கள் கருதியதை உடைத்து, தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக உயர்ந்து காட்டிய நெல்சன் மண்டேலாவும் ஒரு சாதனையாளர்தான். தொடர்ந்து இந்த வரிசையில் இப்போது சேர்ந்துள்ளவர், அப்துல் கலாம் ஆவார். இவர்கள்



எல்லோரும், நம்ப முடியாததை நம்பச் செய்தார்கள். சாத்தியம் இல்லாததை சாத்தியமாக்கினார்கள். இவர்களது சிறந்த குணம் என்ன வென்றால், இவர்கள் எல்லோரும் ஆழமாகச் சிந்திக்கக் கூடியவர்கள். சாத்தியமில்லாதவைகளை, சாத்தியமாகும் என்று எண்ணத் தெரிந்தவர்கள். வாழ்க்கையை மகிழ்ச்சியாக எதிர் கொள்ளத் தெரிந்தவர்கள். நன்றியாக இருக்கப் பழகியவர்கள், முட்டாளோடு வாதாடக்கூடாது என்ற கொள்கை உடையவர்கள். மற்றவர்கள் செய்யத் துணியாத செயல்களை, செய்யத் துணிந்தவர்கள். வாழ்க்கையை ஆழமாக நேசிக்கவும், வேடிக்கையாக அனுபவிக்கவும் தெரிந்தவர்கள். இப்படிப்பட்டவர்களால்தான், வெற்றியாளராக வாழ முடியும். வாழ்க்கையைத் துணிச்சலாக எதிர் கொள்ளவும் முடியும். இவர்களின் கூற்று என்னவென்றால், வெற்றி பெறுவது என்பது எளிதானது. சாதாரணமானது என்பதுதான். இவர்கள் தலைமைத்துவம் என்ற ஒன்றை முதன்மையாகக் கொண்டு செயற்படுபவர்கள். எதையாவது கண்டு பிடிக்க வேண்டும்., எதையாவது சாதிக்க வேண்டும்., தமக்கு எதிரேயுள்ள தடைகளைத் தகர்த்து முன்னோக்கி நடை போடவேண்டும் என்ற கொள்கை உடையவர்கள். அதனால் தான் அவர்கள், இன்றுவரை எல்லோராலும் பேசப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். மேலும் தோற்றாலும்கூட, மாபெரும் துணிச்சலோடு போராடித் தோற்க வேண்டும். தோல்வியைப் பற்றியோ, வெற்றியைப் பற்றியோ கவலை கொள்ளக்கூடாது. வாழ்க்கை என்பது, "நல்ல முறையில் வாழ்வதற்கே" என்ற கொள்கை உடையவர்களாக வாழத் தெரிந்திருக்க வேண்டும். இப்படி இருந்தால் மட்டுமே, நாமும் வெற்றி காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி அரசின் முயற்சிகளுக்கு அமெ. தூதுவர் சமந்தா பாராட்டு

மூன்று தசாப்தங்களாக நீடித்த பிரிவினை கோரிய உள்நாட்டுப் போருக்குப் பின்னர், சிறுபான்மைத் தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் புதிய அரசின் முயற்சிகளை ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் பாராட்டியுள்ளார்.

இலங்கைக்கு மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டிருந்த அவர், கடந்த திங்கட்கிழமை ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:

காணிகளை மீள ஒப்படைக்கும் நடவடிக்கை, காணாமற்போனோரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மற்றும் தமிழ் அமைப்புகள் மீதான தடைநீக்கம் என்பன, போர் முடிந்து ஆறு ஆண்டுகளுக்குப் பின்னரும் தொடரும் காயங்களை ஆற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

குறுகிய காலப்பகுதிக்குள் நிறையவே செய்யப்பட்டுள்ளன. நிலங்களை மீள ஒப்படைத்தல், பயங்கரவாத தடைச்சட்டம், காணாமற்போனோர் விவகாரம், பொறுப்புக்கூறும் பொறிமுறையை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட உறுதிமொழிகளை இலங்கை அரசு வழங்கியுள்ளது என்றார். (த-வ)

## உயிர் நீத்த

வில் உயிர் நீத்த புலிகளை நினைவுகூரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அதை நீக்க நடவடிக்கை எடுத்தோம். யாழ். பல்கலைக்கழகத்திலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகத் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. எனினும், இதனை எம்மால் உறுதிப்படுத்தமுடியாது. ஏனெனில், பல்கலைக் கழகத்துக்குள் நாம் செல்வதில்லையே. எது எப்படியிருப்பினும், பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டமுடியாது. அப்படி ஒட்டப்பட்டால் அதை நாம் அகற்றுவோம். ஒட்டுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என்றார்.

மேலும் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் வழங்கிய பதில்களும் வருமாறு:

**கேள்வி:** மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க இடமளிக்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளதே?

**பதில்:** அரசு இதுவரை அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுக்கவில்லையே. சட்டத்துக்கு விரோதமானதெனில் நாம் அதற்கு இடமளிக்கமாட்டோம். பொது இடங்களில் இவ்வாறு நினைவுகூருவது சட்டவிரோதமானதாகும். ஆனால், நாடாளுமன்றத்தில் அனுமதி வழங்கப்படுவது என்பது வேறு கதை. நாடாளுமன்றம் குறித்து என்னால் கருத்துக் கூறமுடியாது. இதற்கு தற்போது எந்த விதமான சட்ட ஏற்பாடுகளும் இல்லை.

**கேள்வி:** தனிப்பட்ட முறையில் வீடுகளில் அஞ்சலி செலுத்த முடியுமா?

**பதில்:** அதாவது, இறந்த ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் ஒருவர் வீட்டில் அஞ்சலி செலுத்துவாராயின், அதில் எமக்குத் தலையிட முடியாது.

**கேள்வி:** புலிகளாக இருந்தாலும் பிரச்சினை இல்லையா?

**பதில்:** வீட்டில் ஒருவர் அஞ்சலி செலுத்துவராயின் அது எமக்குத் தெரியாதே. தகவல் வராதே. செயற்பாட்டு ரீதியில் அது எமக்கு கடினமாகப் போகும்.

**கேள்வி:** அப்படியானால், ஏனையோருக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அஞ்சலி செலுத்தலாமா?

**பதில்:** பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும், பொது இடங்களில் அது முடியாது. செயற்பாட்டு ரீதியில் எம்மால் தேடிக்கொண்டிருக்க முடியாதே. புலிகள் என்பது இன்னும் பயங்கரவாத அமைப்புத்தானே.

**கேள்வி:** நினைவுகூரப்பட்டால் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன?

**பதில்:** நாம் இது குறித்து அவதானத்துடன் இருக்கின்றோம். சட்டத்துக்கு எதிராக செயற்படமுடியாது.

**கேள்வி:** உயிர் நீத்த புலிகளை அவர்களின் உறவுகள் நினைவுகூருவது சட்டவிரோதமானதா?

**பதில்:** சட்டவிரோதமானதுதானே. இன்றுவரை சட்டத்துக்கு எதிரானது. எதிர்காலத்தில் மாற்றம் வருமா என்று எனக்குத் தெரியாது என்றார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்.

இதேவேளை, மாவீரர் நாள் தொடர்பில் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீரவிடம் தொடர்புகொண்டு வினவியபோது, இது குறித்து பொலிஸாரிடமே நீங்கள் வினவவேண்டும். ஏனெனில், சிவில் சட்டம் முழுமையாக அமுலில் உள்ளது என்றார். (த-சி)

## மணற்காட்டில்

என்று கூறிக் குழு ஒன்று தோண்டும் பணியில் ஈடுபட்டி ருந்த நிலையில், பொலிஸாரால் அந்தப் பணி தடுத்து நிறுத்தப்பட்டு நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று அங்கு தோண்டும் பணி இடம்பெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வந்திருந்த குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை மணற்காட்டுக் கடற்கரையில் குறித்ததொரு பகுதியில் பைக்கோ இயந்திரம் மூலமாக பெரிய குழி ஒன்றைத் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்தது. அதனைக் கண்ட அங்குள்ள மக்கள் அவர்களிடம் சென்று விசாரித்தபோது, தாம் பொலிஸார் என்றுகூறித் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் சந்தேகம் கொண்ட மக்கள் அது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அங்கு பொலிஸார் விரைந்து சென்றபோது குறித்த குழுவினர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். அவர்களில் 4 பேர் காரில் தப்பியோடியபோதே பொலிஸாரால் கார் மடக்கிப் பிடிக்கப்பட்டது. அதிலிருந்து 4 பேரைப் பொலிஸார் கைது செய்து அவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோதே விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்ட தங்கப் புதையல் அங்கு உள்ளது என்றும், அதனைத் தோண்டுவதாகவும் சந்தேக நபர்கள் கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து புதையல் தோண்டப்பயன்படுத்தப்பட்ட பைக்கோ வாகனம் மீட்கப்பட்டதோடு அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர்கள் நீதிமன்ற உத்தரவுப்படி பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே குறித்த பகுதியில் தங்கம் உள்ளதா என்பது பற்றிய ஆய்வுக்காக அந்த இடம் இன்று தொடக்கம் எதிர்வரும் 2 ஆம் திகதி வரைக்கும் தோண்டப்படவுள்ளது. மருதங்கேணி பிரதேச செயலர், யாழ்.மாவட்ட பூகோள சுரங்க கனிய அத்தியட்சகர், மத்திய சுற்றுச்சூழல் அத்தியட்சகர், தொல்பொருள் திணைக்கள அத்தியட்சகர், பருத்தித்துறைநீதிவான் ஆகியோர் முன்னிலையில் தோண்டும் பணி இடம்பெறவுள்ளது.

புதையல் தோண்டுவதற்கு வந்த குழுவினர் வடமராட்சிப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளனர் என்றும், அவர்களது நடமாட்டம் பற்றிய விடயங்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால் குறித்த கமரா பதிவுகளைப் பொலிஸார் கைப்பற்றி அதன் மூலமாகவும் சந்தேகநபர்களை இனங்காணவும் கைது செய்யவும் நடவடிக்கைக்கு முற்பட்டுள்ளனர். அந்தக் கமராவை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பரிசோதனைக்காக அனுப்பி தரவுகளைச் சேகரிக்க நீதிமன்றின் அனுமதியைப் பொலிஸார் கோரியிருந்தனர். அதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது. (த-4-108-101)

## கேட்டதோ

என்றும், கல்வி அமைச்சு 3 ஆயிரத்து 78 மில்லியன் ரூபா தேவை என்றும், உள்ளூராட்சி அமைச்சு 707 மில்லியன் ரூபா தேவை என்றும் மதிப்பீடு செய்திருந்தன.

தற்போது கொழும்பு அரசினால் ஒதுக்கப்பட்ட 3 ஆயிரத்து 199.3 மில்லியன் ரூபாவை, 5 அமைச்சுக்களுக்கும் பங்கீடு செய்து அதனடிப்படையில் வடக்கு அரசின் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு வடக்கு மாகாண சபை 6 ஆயிரத்து 977 மில்லியன் ரூபாவுக்கு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், கொழும்பு அரசு ஆயிரத்து 440 மில்லியன் ரூபாவை மாத்திரமே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மோ.சைக்கிளில்

இந்த விபத்தில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த பாலசிங்கம் மயூரதன் (வயது -23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ்.நகரிலிருந்து சுன்னாகம் நோக்கிச் சென்றவர் முன்னே சென்றுகொண்டிருந்த பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே ஓட்டோ ஒன்று வந்ததால் திடீரென பிரேக் பிடித்துத் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார்.

அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

## காணாமற்போனோரின்

முகாமையாளர்களுடனான வர்த்தக சந்திப்பின் பின்னரே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இவ்வாறான சம்பவங்கள் ஏன் தொடர்ந்தும் இலங்கையில் இடம்பெறுகின்றன எனக் கேள்வி எழுப்பியுள்ள டேவிட் டலி, இந்த விடயம் குறித்து அரசுடன் கலந்துரையாட வேண்டிய தேவையுள்ளதாகக் கூறியுள்ளார். அத்துடன், இவ்வாறான செயற்பாடுகள் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெறுவது தொடர்பான இலங்கையின் நம்பிக்கை குறித்து கேள்விகளைத் தோற்றுவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, அண்மையில் பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்தும் ஐரோப்பிய தூதுக்குழுவின் தலைவர் கவலை தெரிவித்துள்ளார். (த-சி)

## எரிகாயமடைந்த

மீளக்குடியமர்ந்தபோதும் இன்னும் தற்காலிக குடிசையிலேயே அவரது குடும்பம் வசித்து வருகிறது. இந்நிலையில் கடந்த 15 ஆம் திகதி மோட்டார் சைக்கிள் ஸ்ராட் எடுக்கவில்லை என்பதால் பிளக்கைக் கழற்றி சுத்திகரிப்பதற்காகப் பெற்றோல் எடுத்துச் சென்றுள்ளார். பாத்திரம் ஒன்றினுள் பெற்றோலை எடுத்துச் சென்றதால் அது தட்டுப்பட்டுள்ளது. குடிசை என்பதனால் வாசலிலேயே சமையல் பகுதியும் இருந்துள்ளது. இதனால் தட்டுப்பட்ட பெற்றோல் அடுப்பினுள் சிந்தியதால் தீ பற்றியுள்ளது. இதனால் அவர் காயமடைந்துள்ளார்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது 10 ஆவது நாளான நேற்று அவர் உயிரிழந்தார். நீதிமன்றப் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணையை மேற்கொண்டார். பின்னர் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (த-4)

## உறவுகளை

விடும். இதனை இந்த அரசிடம் சொல்லி வைக்கவிரும்புகின்றேன்'' என்றும் அவர் கூறினார்.

மாவீரர் நாள் பயங்கரவாதிகளைநினைவுகூரும் நாள் என்றும், அந்த நாளில் பொது இடங்களில் விளக்கேற்றி அவர்களை எவரும் நினைவுகூர முடியாது என்றும் கடும்போக்குடைய சிங்கள அரசியல்வாதிகளும், இராணுவத்தினரும், பொலிஸாரும் தெரிவித்துவருகின்ற நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாடு ஜனநாயக நாடு என்றால் இது நல்லாட்சி என்றால் தமிழ் மக்கள் தங்கள் எண்ணங்களை உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும், ஒன்று கூடுவதற்கும், உயிர் நீத்த தமது உறவுகளை நினைவு கூருவதற்கும் சுதந்திரம் உள்ளது. தமிழர் பண்பாட்டில் இறந்தவர்களுக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையை நிறைவேற்றுவது முக்கியமானதாக விளங்குகின்றது.

எனவே, தமிழர்கள் உயிர் நீத்த தமது உறவுகளுக்கு அமைதியான முறையில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையை நிறைவேற்றி அஞ்சலி செலுத்துவதை எவராலும் தடுக்க முடியாது. இதனை எவராவது தடுத்தால் அது பெரும் மனித உரிமை மீறலாகும்.

உயிர் நீத்தவர்கள் மதிக்கப்படவேண்டும். அவர்களை நினைவுகூருவதைத் தடுக்க முயல்வது தமிழ் மக்களின் மனக்காயங்களையும், துன்ப துயரங்களையும் மேலும் ஆழப்படுத்தும் என்றும், நாட்டின் நல்லிணக்கத்தைப் பாதிக்கச் செய்துவிடும் என்றும் இந்த அரசுக்கு சொல்லிவைக்க விரும்புகின்றேன் என்றார். (த-சி)

## புலம்பெயர்

கினார்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக கொள்கை மாறாதவராக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தலைமை வகித்து வழிநடத்தி வந்தார். 2008 ஆம் ஆண்டு வரை அவரின் பிறந்த தினம் தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கு எங்கும் கொண்டாடப்பட்டது. எனினும் பின்னர் ஏற்பட்ட இலங்கை அரசின் கடும் கெடுபிடிகளால் அங்காங்கே கொண்டாடப்பட்டு வருகின்றது.

எனினும் தமிழகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் வழமை போன்று இந்த முறையும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. தமிழகத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினால் இன்று இரவு பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கனடா, பிரான்ஸ், நோர்வே, லண்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் பல்வேறு கலை நிகழ்வுகள், வீதி நிகழ்வுகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழர் தாயகத்தில் கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளில் தேசிய தலைவருக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் என எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (த-வ)


**மரண அறிவித்தல்**



**ஐயாத்துரை பரமசிவம்**

(சிந்து மில் உரிமையாளர்)

சுதுமலை குருந்தடி பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வேம்படி முருகன் கோயிலடி, தாவடி தெற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பரமசிவம் (சிந்து மில் உரிமையாளர்) நேற்று (25.11.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் பரமநாதனின் சகோதரனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் வாகீசன், சிவசுதன், விஜிதா, ஸாதுரியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தெல்லிப்பழை), சிந்துஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்சன் (உரிமையாளர் - சத்யா ஸ்ரோஸ் பம்பலப்பிட்டி) ஸ்ரீகரன் (விஞ்ஞான தொழில் நுட்ப உத்தியோகத்தர் தெல்லிப்பழை), சஜிந்தன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் வர்ஷிகாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தர்மபூபதியின் மைத்துனரும் சத்யாதேவி, சசிகலா, நித்தியா, தர்மபாலினி, மோகன், கிருபா, சுஜந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.30 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி முருகன் கோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர். (66317)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி நிகழ்வு



திருமதி

## சிவகாமி ஜெயக்குமரன்

தமிழ் மக்களால் தமிழினி என அன்புடன் அழைக்கப்பட்ட திருமதி சிவகாமி ஜெயக்குமரனின் அந்தியேட்டி நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29.11.2015) மதியம் 12.00 மணியளவில் அவரது தாயாரின் இல்லமான இல. 143, 8 ஆவது ஒழுங்கை சிவபுரம், பரந்தன் என்ற முகவரியில் நடைபெறும் என்பதனை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம். (பரந்தன் சந்தியில் இருந்து முல்லைத்தீவு வீதி வழியாக வரவும்)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## காசிப்பிள்ளை பத்மநாதன்



காரைநகர் இராசாந்தோட்டத்தை ப் பிறப்பிடமாகவும், விளானை, களபூமி காரைநகரை வசிப்பிடமாக வும் கொண்ட காசிப்பிள்ளை பத்மநாதன் நேற்று (25.11.2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதிகளின் புதல்வனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தயானந்தன் (சிவா - காசாளர் S.V.M Pvt Ltd கொழும்பு) அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான கனகசபை, சரஸ்வதி மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் தர்மலிங்கம் காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் காசலிங்கம், பரமசாமி காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் இரத்தினபூபதி, வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் சாவித்திரிதேவி, யோகேஸ்வரி, அன்னலட்சுமி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2015) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் களபூமி தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

T.P : 077 185 3822

குடும்பத்தினர்.

(66315)

# மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்

மணி விழாக் காணும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர்


**வித்தியா தீபம், சேவா ஜோதி**

## ஜனாப். எம். எம். சியான்

(M.Ed, MSc. Edu. Mgt, PGDE, PGDM, B.A. Hons)




ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக,
கோட்டக் கல்விப் பணிப்பாளராக,
சிரேஷ்ட உதவிச் செயலாளராக,
வலயக் கல்விப் பணிப்பாளராக
ஆண்டுகள் முப்பத்து நான்கு அரிய
கல்விப் பணி செய்து
அகவை அறுபதில் மணி விழாக் காணும்
எங்கள் அன்பு வலயக் கல்விப் பணிப்பாளர்
அவர்களை வாழ்த்துவதில்
அக மகிழ்வடைகின்றோம்.



26.11.2015 இன்று பி.ப 02.00 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் நடைபெறும் "மணி விழா" நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடனும் மகிழ்வுடனும் அழைக்கின்றோம்.

**வாழ்த்தி வரவேற்போர்:**
**வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள்,**
**வலயக் கல்வி அலுவலக அலுவலர்கள்,**
**அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள்.**
**மன்னார் கல்வி வலயம்.**

(C 20360) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுபறியாக நீடித்த ஆட்டம்
# சென்.மேரிஸ் திரில் வெற்றி





யாழ்ப்பாணம், நவ. 26
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பிரிவு இரண்டிற்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில்கொழும்பு நியூ யங்ஸ்ரார் அணியை வீழ்த்தி கிண்ணத்தைக்கைப்பற்றியதுநாவாந்துறை சென்.மேரிஸ் அணி.

அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று மாலை 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து கொழும்பு லெவின் நியூ யங்ஸ்ரார் அணி மோதியது. இறுதியாட்டம் ஒன்றுக்கு இருக்க வேண்டிய விறுவிறுப்புக்களும், பரபரப்புக்களும், ரசிகர்களின் கூக்குரல்களும் ஆட்டத்தில் தவறாது அங்கம் வகித்தன. பந்து அங்கும் இங்கும் அல்லாடித் திரிந்ததும் ரசிகர்கள் தொண்டைத் தண்ணீர் வற்ற கத்தியதும்தான் மிச்சம் கோல் கணக்கு எதுவும் ஆரம்பிக்கப் படாமலேயே முதல்பாதி முடிவடைந்தது.

இரண்டு அணியின் சார்பாகவும் சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. முதல்பாதியில் நீடித்த அதே போராட்டத்தன்மை இரண்டாம் பாதியிலும் அப்படியே தொடர்ந்தது. சென். மேரிஸின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவரும் முன்னாள் அணித்தலைவருமான ஜக்சன் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டார். 10 வீரர்களுடன் தொடரவேண்டிய இக்கட்டான நிலை மேரிஸிற்கு. இருப்பினும் மேரிஸை எதிர்த்து யங்ஸ்ரார் அணியால் கோலெதுவும் பதியப்படவில்லை. 90 நிமிடங்களின் முடிவுவரை 0-0 நிலைமைதான்.

மேலதிகமாக வழங்கப்பட்ட 20 நிமிடங்களில் முதல் பத்து நிமிடத்தில் கோல் கணக்கை ஆரம்பித்தது வைத்தது யங்ஸ்ரார். பின்னரான 10 நிமிடத்தில் பழிதீர்த்தது மேரிஸ். சமநிலைத் தகர்ப்பில் ஆட்டத்தின் முடிவு தீர்மானிக்கப்பட வேண்டிய நிலைமை. சமநிலைத் தகர்ப்பில் சென்.மேரிஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தேசியமட்ட சம்பியன் ஆனது. இறுதியாட்டத்திற்குப் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட்டும், கௌரவிருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி மோகனதாஸும் கலந்து கொண்டனர்.

(ம-23)

## வவுனியா நகரசபைக்கு எதிராக நேற்றையதினம் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், நவ. 26
வவுனியா நகரசபை பொது விளையாட்டு மைதானத்தை பாதுகாப்புப் படையினரின் நிகழ்வொன்றிற்கு வவுனியா நகரசபை வழங்கியமையை அடுத்து நகரசபையின் நிர்வாகத்துக்குஎதிர்ப்புத்தெரிவித்து விளையாட்டு வீரர்கள் குறித்த மைதானத்தில் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

வவுனியாநகரசபைமைதானத்தில் கடந்த 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் வன்னி கட்டளைத் தலைமையகத்தால் கண்காட்சியொன்று நடத்தப்பட்டது. மைதானத்தில் படையினரின் வாகனங்கள் சென்றுவந்ததால் மைதானம் தனது சமதரைத் தன்மையை இழந்திருந்தது. மட்டுமல்லாமல் மைதானத்தின் ஓடுபாதையும் மத்திய பகுதிகளும் பெருமளவில் சேதமடைந்திருந்தன. மைதானத்தில் தற்காலிக கழிப்பறைகளும் அமைக்கப்பட்டமை வீரர்களால் விரும்பப்படவில்லை. இந்நிலையில் படையினரின் களியாட்ட நிகழ்வுகளுக்கு மைதானத்தை வழங்குவதை நிறுத்த வேண்டும் எனக்கோரியும் வழங்கியமையைக் கண்டித்தும் வீரர்கள் தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரை கிட்டத்தட்ட 3 மணித்தியாலங்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வீரர்கள் 'இவ்வாண்டு பெரும்போக நெற்செய்கை நகர சபை மைதானத்திலா?', 'ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் மைதானம் எங்கே?', 'வேலியே பயிரை மேயலாமா?', 'ஓடுபாதைகள் வீரர்கள் ஓடவே வாகனங்கள் ஓடுவதற்கு அல்ல. போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

(ம-402)

## சுழலுக்குச் சாதகமான நாக்பூர் ஆடுகளம்
## தெ.ஆபிரிக்காவின் தடுமாற்றம் ஆரம்பம்



இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாளாகிய நேற்று இந்தியா முதல் இன்னிங்ஸிற்காக 215 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் தென்னாபிரிக்கா நாள் முடிவில் 11-2 என்ற நிலையில் உள்ளது.

ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பது நாக்பூரில். நாக்பூர் ஆடுகளம் சுழலுக்கு முழுவதுமாக பங்களிப்புச் செய்யும் என்ற காரணத்தினால் சுழல் வீரர்களை நம்பி இரு அணிகளும் களமிறங் கின. இந்திய அணியில் அஸ்வின், ஜடேயா, மிஸ்ரா மூவரும் இடம் பிடித்திருந்தனர். வேகப்பந்து வீச்சாளராக இசாந் சர்மா மட்டுமே இடம்பிடித்திருந்தார். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது. இந்தியாவின் ஆரம்ப வீரர்கள் தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் எவ்வித மாற்றத்தையும் கோக்லி ஏற்படுத்தவில்லை. மீண்டும் தடுமாறினார் தவான். 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியா 50 ஓட்டத்தில் முதல் இலக்கை இழந்தது.

நீண்டநேரம் தாக்குப் பிடிப்ப தென்பது சாத்தியமற்ற நாக்பூரில் புஜாரா விஜயுடன் இணைந்து சிறிது நேரம் தாக்குப் பிடித்தார். அவ்வப்போது பவுண்டரிகளாகத் தனது ஆட்டத்தை வலுவாகக் கொண்டு சென்றார் முரளி விஜய். 40 ஓட்டங் [illegible] வுக்கு வந்தது. புஜாரா ஆட்டமிழந்த சில நிமிடங்களில் போல்ட் ஆனார் ரகானே. கோக் லியையும் வீழ்த்தினார் மோர்கல். முழுவ தும் பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் வேகப் பந்து வீச்சாளரான மோர்கல் முன்னணி வீரர்களை வீழ்த்தியது அபாரம் தான். 116-5 என்று இருந்த இந்தியாவை தலை நிமிர வைக்கும் பணியில்முனைப்புக் காட்டினர் சகாவும் ஜடேயாவும். தமது போராட்டத்தில் கிட்டத்தட்ட வெற்றியும் கண்டனர். இணைப்பாட்டமாக 48 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஜடேயா. சிறிதுநேரத்தில் சகாவும் பவிலியன் திரும்ப முடிவில் இந் தியா 215 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக முரளி விஜய் 40 ஓட் டங்களையும் ஜடேயா 34 ஓட்டங் களையும் சகா 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாககார்மர் 4 இலக்குகளையும் மோர்கல் 3 இலக்குகளையும் ரபாடா, எல்கர், தகீர் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்பம் இந்த ஆட்டத்திலும் சறுக்கவே செய்தது. ஓட்டங்கள் எதனையும் பெறாமல் அஸ்வினின் சுழலில் சிக்கினார் ஸ்ரியான். மூன்றாவது வீரராக அம்லா களமிறங்க வேண்டிய முறை. ஆனால் நாள் முடிவதற்கு சில பந்துப்பரிமாற்றங்களே மீதமிருந்ததால் தாகீரை களமிறக்கினார் அம்லா. துடுப்பாட்ட வீரர்களாலேயே தாக்குப் பிடிக்க இயலவில்லை. தாகீரால் என்ன செய்ய முடியும். ஜடேயாவின் பந்தில் போல்ட் ஆனார். தற்பொழுது களமிறங்கினார் அம்லா. இதை முன்னதாகச் செய்திருந்தால் ஒரு இலக்கைக் காத்திருக்கலாம். நாள் முடிவில் தென்னாபிரிக்கா 11-2. இரண்டாம் நாள் இன்று. ஆட்டம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் மயூரதன்

(மருத்துவ விற்பனைப் பிரதிநிதி Emerchemie NB Limited, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி A/L 2011 மாணவன்)



வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் மயூரதன் நேற்று (25.11.2015) புதன்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் பாலசிங்கம் (ஓய்வு பெற்ற வங்கி ஊழியர் HNB யாழ்ப்பாணம்) சண்முகப்பிரியா தம்பதியினரின் அன்பு மகனும் கீர்த்தன், சயந்தன், லதீபா (HNB சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சஜித்தா, சோபிதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் செல்லத்துரை காலஞ்சென்றவர்களான இரத்தினம், மாசிலாமணி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2015) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவு டல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர். (66312)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சி.ரோகினி (றொக்சி)



தோற்றம் 1982.11.17 | மறைவு 2013.11.26

என் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே.....
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்......

கணவர்
மகள்- பிரியதர்சினி (யாழினி)
பிரியங்கா (திவ்வியா)

19 ஆம் கட்டை சந்தி, குடமுனை முலை, தாச்சிக்குடா, முழங்காவில்.

## மரண அறிவித்தல்



### திருமதி கண்ணம்மா மயில்வாகனம்

அளவெட்டி தெற்கு, தம்மளையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கு, செட்டிச் சோலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்ணம்மா மயில்வாகனம் 24.11.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்மளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், செட்டிச்சோலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இளையாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், மயில்வாகனத்தின் பாசமிகு மனைவியும், செந்தில்வாசன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), சந்திரவதனா, செல்வ நேசன் (ஜேர்மனி), விமலயோகினி (ஜேர்மனி), காலஞ்சென்ற பார்த்திபராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌசல்ஜா (கணக்காளர் - ஆஸ்திரேலியா), முருகதாஸ் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - அளவெட்டி மத்தி J/216), லதா (ஜேர்மனி), சுரேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், காவிஜா கண்ணம்மா (ஆஸ்திரேலியா), மகிழன் - Bsc (ஆசிரியர், கிளிநொச்சி-பாரதிபுரம் மகாவித்தியாலயம்), கிருஷ்ணா (முகாமைத்துவபீடம்- சமுத்திர பல்கலைக்கழகம் -கொழும்பு), பவித்திரன், பிரியங்கா, பிரவீந் (ஜேர்மனி- மாணவர் கள்), கௌதமன், அபிலாஷ், அஸ்விந் (ஜேர்மனி - மாணவர்கள்) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இராசரத்தினம், தனபாக்கியம், அன்னம்மா, சிவபாக்கியம்,பர்வததேவி மற்றும் கயிலாயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற நாகலிங்கம் மற்றும் இராசம்மா, இராசரத்தினம் (பண்டிதர் - இருபாலை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.11.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தம்மளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிச்சோலை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(66396)(11.15.12)

தகவல்:
குடும்பத்தினர்.

## வலைப்பந்தாட்டத் தொடர்

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் வலைப் பந்தாட்டத் தொடர் இன்று இடம்பெறவுள்ளது. தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வுகளும் இன்றைய தினமே நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

குறித்த தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு முன்னதாக தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். ஆட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று இரவு 7 மணியளவில் மின்னொளியில் இறுதியாட்டமும் அதைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். (ம-108)







## விற்பனைக்கு

Double Door Fridge (SAMSUNG) மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு : 077 174 6101 (66316)

## கணினி திருத்திக்கொடுக்கப்படும்

கணினி பாகங்கள் வீடு வந்து உடன் திருத்திக்கொடுக்கப்படும்.

antiviurs 2வருட உத்தரவாதத் துடன் கொடுக்கப்படும்.

(66430)(12.15)

தொ.பே. : 077 706 4151

## கண்ணீர் அஞ்சலி



S.V.M (Pvt) Ltd கொழும்பு நிறுவனத்தில் காசாளராகப் பணி புரியும் பத்மநாதன் தயானந்தன் (சிவா) அவர்களின் அன்புத் தந்தை

**காசிப்பிள்ளை பத்மநாதன்**


25.11.2015 புதன்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்

S.V.Murugesu
154, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

S.V.M(pvt)Ltd.
122, டாம் வீதி,
கொழும்பு-12

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை சந்தாதோட்டத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி நாவற்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட

### பொன்னன் சிவராசா

(வெல்டர் - அச்சுவேலி,
மணப்பந்தல் சேவை - நாவற்காடு)

அவர்களின் மரணச் செய்தியினை ஆழ்ந்த அனுதாபத்தோடு தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(62208)

தகவல்
மகன் - நஞ்சிற்றாஜ் (077 817 1551)

Mega Sale

வடமாகாணத்தின் முன்னணி நிறுவனம் நடத்தும் மாபெரும் புத்தககண்காட்சியும், மலிவு விற்பனையும்

Mega Sale

பாலர் முதல் பல்கலை வரையான பாடநூல்கள்

10% - 25 % வரையான கழிவுகள்

இசைக்கருவிகள்
புதுக்குடியிருப்பு மாணவர்கள் நலன்கருதி.
சமையல் நூல்கள்

மீண்டும் முல்லை மண்நோக்கியவிசேட விற்பனைக்காட்சிக் கூடம்.

ஆங்கில நாவல்கள்
மருத்துவ நூல்கள்

இடம் : புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
காலம் : டிசெம்பர் 1ஆம் 2ஆம் திகதிகளில்
நேரம் : காலை 8.30 மணிமுதல் மாலை 7.30மணிவரை

Mega Sale

Mega Sale

சரித்திர நாவல்கள்
குடும்ப நாவல்கள்.

எமது பிரமாண்டமான காட்சியறை போலவே அனைத்துவகை புத்தகங்கள், சர்வதேச தரம்வாய்ந்த ஸ்ரேசனறி வகைகள். முந்துங்கள் விரையுங்கள் உங்கள் விருப்பம் போலவே தெரிவு செய்திட....

மார்கழி 06 தொடக்கம் தை 16 வரை பருவகால விற்பனைக்காக எமது நிறுவனம் ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்க்கு அறியத்தருகின்றோம்

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5542 e-mail: acdil@ymail.com

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சங்கரப்பிள்ளை வைத்திலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



எம் குடும்பத்தின் குல விளக்கே !
பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்து எம்மையும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே !
ஆண்டு ஒன்றானாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது
ஓராண்டு காலமதில் உமைப்பிரிந்து ஒரு பொழுதும்
உம்மை மறவாமல் நாம் இருந்தோம்
அப்பா என்று அழைக்க நீங்கள் இல்லையே
அடி மனதில் வலி துடிக்க உயிரோடு வாழ்கின்றோம்...

உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு:- 19.11.1923
இறப்பு:- 07.12.2014

109, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (66308)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு: 021 493 1111, 021492 7415 advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.